Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389

National Tamil Daily — தேசிய தினசரி

தபாற் பெட்டி எண் 49

மலர் 5 — யாழ்ப்பாணம் — சுபகிருது பங்குனி 1 ஆம் நாள் — ஷவ்வால் 17 — (14-3-63) — வியாழக்கிழமை — இதழ் 34

ஈழநாடு

சந்தா விபரம்

வாரப்பதிப்பு உட்பட

ஒரு வருடத்துக்கு ரூபா 40-00

6 மாதத்துக்கு ரூபா 21-00

3 மாதத்துக்கு ரூபா 11-00

# "ராஜரத்தினவின் புகார் பொய்

## 'நெக்ளஸ்' கொடுத்ததை நிரூபிக்கட்டும்

—தொண்டமான்

## "மந்திரியே மறுக்கவில்லை; இப்பொழுது இவரா கேட்பது?"

—ராஜரத்தின

கொழும்பு, புதன்

திருமதி இலங்கரத்தினவுக்கு இருபதினாயிரம் ரூபாய் பெறுமதியான 'நெக்ளஸ்' மாலை ஒன்றை திரு. தொண்டமான் வாங்கிக்கொடுத்ததாக வெலிமடை எம். பி. திரு. கே. எம். பி. ராஜரத்தின சென்றவாரம் பார்லிமெண்டில் கூறிய குற்றச்சாட்டை அவர் நிரூபிக்கவேண்டுமென்று திரு. தொண்டமான் கேட்டுள்ளார்.

உணவு வர்த்தக மந்திரி பார்லிமெண்டில் பேசிக்கொண்டிருந்தபோதே தாம் அக்குற்றச் சாட்டைத் தெரிவித்திருந்ததாகவும் அவர் அதை மறுக்காமலிருந்துவிட்டாரென்றும் ஒரு வாரத்துக்குப் பின்னர்தானா திரு. தொண்டமான் மறுக்கவேண்டும் என்றும் திரு. ராஜரத்தின கேட்டுள்ளார்.

சென்றவாரம் பார்லிமெண்ட் கூட்டத்தில் உணவு வர்த்தக மந்திரி திரு. இலங்கரத்தினவுக்கும் திரு. கே. எம். பி. ராஜரத்னவுக்குமிடையில் ஒரு கடட்த்தில் வாக்குவாதம் ஏற்பட்டபொழுது, திருமதி இலங்கரத்தினவுக்கு இருபதினாயிரம் ரூபாய் பெறுமதியான நெக்ளஸ் ஒன்றை திரு. தொண்டமான் அன்பளிப்பாகக்கொடுத்தார் என்று திரு. ராஜரத்தின குற்றம்சாட்டினார். தன்னை வற்புறுத்தினால், தனது குற்றச்சாட்டைத் தாம் நிரூபக்கத் தயார் என்றும் திரு. ராஜரத்தின அப்பொழுது தெரிவித்திருந்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## "கான்ஸ்டபிள் நடராஜா கையைப் பிடித்து இழுத்தார்"

### மற்றோர் கான்ஸ்டபிள் மனைவி வாக்குமூலம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம், பொலிஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் நந்தசேனவுடைய மனைவி பிரேமா மனதுங்க என்பவரின் கையைப்பிடித்து இழுத்துப் பலாத்காரம்செய்ய எத்தனித்ததாக கான்ஸ்டபிள் நடராஜா என்பவர் மீது யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் இன்று குற்றஞ் சாட்டப்பட்டது.

பிரேமா மனதுங்க சாட்சிய மளிக்கையில் கூறியதாவது:

"கடந்த ஜனவரி 9-ம் திகதி நானும் எனது பிள்ளையும் எங்கள் அறையில் இரவு 10 மணிக்கு நித்திரையில் ஆழ்ந்திருந்தோம். எனது தாயாரும் மைத்துனரும் அடுத்த அறையில் நித்திரை செய்தனர். கணவன் இரவு "டியூட்டி"க்குப் போய் விட்டார். அப்போது என்கையைப்பிடித்து எவரோ இழுத்ததை உணர்ந்தேன். 'யாரது' என்று சப்தமிட்டு எழும்பினேன். கான்ஸ்டபிள் நடராஜா அப்போது என்கையைவிட்டு விட்டு வெளியேறினார். சத்தத்தைக்கேட்டு என் தாயார் அறைக்கு வந்தார். ஆனால் அச்சமயம் கான்ஸ்டபிள் நடராஜா வெளியேறிவிட்டார்".

வழக்கு ஏப்ரல் 3-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## நம்பிக்கையில்லா தீர்மானம்

யாழ்ப்பாணம், வியாழன்

சமீபத்தில் யாழ்ப்பாணம் உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் மீது நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ஊர்ஜிதம் செய்யப்படும் பொருட்டு, வருகிற 25-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, மாநகர சபையின் விசேஷக் கூட்டம் ஒன்று நடைபெறுமென அங்கத்தினர்களுக்கு முனிசிபல் கமிஷனர் திரு. டி. டி. ஜயசிங்கா அறிவித்துள்ளார்.

புது அரசாங்க ஊழியருக்கு

## சிங்களத்தில் சிரேஷ்டதராதர பத்திர தேர்ச்சி

### அக். 31 க்குள் பெறவிட்டால் சம்பள உயர்வு இல்லை

கொழும்பு, புதன்

1961-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் திகதிக்கு முன் அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட புதிய ஊழியர்கள் சிங்களத்தில் சிரேஷ்டதராதரப் பத்திரப் பரீட்சைத் தரத்தை அடையும் கடைசித் திகதி அக்டோபர் 31-ம் திகதியாகும் தவறுபவர்களுக்கு சம்பள உயர்வு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படும்.

இது சம்பந்தமான உத்தரவு திறைச்சேரியால் இலாகாத்தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 5-வது சம்பள உயர்வைப் பெறுவதற்கு முன் இந்த ஊழியர்கள் சிங்களத்தில சிரேஷ்டதராதரத் தேர்ச்சியைப் பெற்றிருக்கவேண்டும்.

## 31 அரசாங்க ஊழியருக்கு இடமாற்றம்

### சிங்கள பரீட்சையில் சித்தியடையாதது காரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

ஏப்ரல் முதலாந்திகதியுடன் யாழ்ப்பாணத்தில் வேலை செய்பவர்களும் சிங்களத் தகுதிப் பரீட்சைக்குத் தோன்றாதவர்களுமாகவுள்ள 31 அரசாங்க ஊழியர்கள் தென்பகுதிக்கு மாற்றப்படுகின்றனர். அவர்களின் இடங்களை நிரப்ப 30 தமிழ் ஊழியர்களும் 1 சிங்கள ஊழியரும் தென்பகுதியிலிருந்து மாற்றம் பெறுகின்றனர். இந்த 30 தமிழர்களும் 3-ம், 5-ம் வகுப்புத் தரச் சிங்களபரீட்சையில் சித்தியடைந்தவர்களாவர்.

இந்த மாற்றங்கள் எவ்வகையிலும் தடைப்படுத்தமாட்டாது எனத் திறைசேரி அறிவித்துள்ளதாகவும் தெரிகிறது.

## தீயில் கருகி மாண்டனர் மூன்று குழந்தைகள்!

### தாய் கிணற்றில் வீழ்ந்து உயிர் விட்ட பரிதாபம்

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்று மாலை ஆனையிறவுக் கருகிலுள்ள புதிய குடியேற்ற நகரான உமையாள்புரத்தில ரத்தினம் என்பவருக்குச் சொந்தமான ஒரு குடிசை தீக்கிரையானதன் காரணமாக அதிலிருந்த 3 குழந்தைகள் கருகி மாண்டதாக அறிவிக்கப்படுகிறது. 3 வயது ஆண் குழந்தை ஒன்றும், 7 வயதுச் சிறுவன் ஒருவனும், 5 வயதுப் பெண் குழந்தை ஒன்றுமே இறந்தவர்களாவர். இச் சம்பவத்தைக் கண்ணுற்ற தாயார் ராசம்மா மனம் பொறாமல் கிணற்றில் வீழ்ந்து உயிர் நீத்தார் என்றும் அறிவிக்கப்பட்டது.

## 9 பேருக்கு 'அர்ஜுன்' பரிசு

புதுடில்லி, மார்ச் 13

இந்தியாவின் மிகச் சிறந்த 9 விளையாட்டு வீரர்களுக்கு மிக உயர்ந்த "அர்ஜுன்" விளையாட்டுப் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

புகையிலை — மிளகாய் — கத்தரி — முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும் சுறுணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

மெற்றசிஸ்ரொக்ஸ்

METASYSTOX

T'GRAMS ROYAEL — ROYAL DISPENSARY — PHONE 397 JAFFNA

## கிராமச் சங்கங்கள் கட்டளைச் சட்டம் 17–ஆம் பிரிவின் படியான அறிவித்தல்

என் 520-1961 இன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான கிராமச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு, உள்ளூராட்சி உதவி அதிகாரி வட பிரதேசம் (மேல்) யாழ்ப்பாணம் சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான், இதன் அட்டவணையின் பத்தி I இல்குறிக்கப்பட்டுள்ளகிராமச்சங்கத்தின் கூட்டத்தை அந்த அட்டவணையின் பத்தி II இல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப் பட்டுள்ள திகதியில், அந்த அட்டவணையின் பத்தி III இல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில், அந்த அட்டவணையின் பத்தி IV இல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகின்றேன்.

சி. சி. மாணிக்கவாசகர்
உள்ளூராட்சி உதவி அதிகாரி,
வட பிரதேசம் (மேல்).

அட்டவணை

| பத்தி I | பத்தி II | பத்தி III | பத்தி IV |
|---|---|---|---|
| | திகதி | நேரம் | இடம் |
| பல்லவராயன்கட்டு, கிராமச் சங்கம். | 20-3-1963. | 3-30 பி. ப. | பல்லவராயன்கட்டு, கிராமச்சங்கம். |

சிறந்த சேமிப்பு
அதிக ஆதாயம்
உயர்ந்த வட்டி
6%
உறுதியான இடம்
சிலோன் றிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

### திருமண அழைப்பு

நிகழும் சுபகிருது ஞு பங்குனி மீ 3-ம் திகதி (16-3-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி 54 நிமிஷம் முதல் 11 மணி 44 நிமிஷம் வரை வரும் இடப லக்கின சுபமுகூர்த்தத்தில் எமது மருகியும் பிரம்ம ஸ்ரீ சி. முத்துச்சாமிஐயர் அவர்களின் ஏகபுத்திரியுமான சௌபாக்கியவதி கனகாம்பிகை அம்மாளுக்கும் அராலி வடக்கு பிரம்மஸ்ரீ ப. இரத்தினக்குருக்கள் அவர்கள் ஜ்யேஷ்ட குமாரன் சிரஞ்சீவி ஸ்ரீ நாகேந்திரசர்மாவுக்கும் மணமகளில்லத்தில் திருமணம் நடாத்தத் திருவருளை முன்னிட்டு நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உறவினர், நண்பர் யாவரும் குடும்பசமேதராகச் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
இ. சி. இரகுநாதையரும் பாரியாரும்.
சி. முத்துச்சாமி ஐயர்.
சோதிடபரிபாலன மடம்
கொக்குவில்.

764.

### தேவை:

எமது தயாரிப்புகளை சயிக்கிள்களில் சென்று விற்பனை செய்ய ஆட்கள்தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். விஜயகம் இன்டஸ்றீஸ், 39 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

762

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய தர்மலோக் இனும். தொய்வு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணநந்தர்
கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### பிரசித்த ஏல விற்பனவு விளம்பரம்

**பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டின் இல. 7144**

புலோலி மேற்கு குஞ்சன்முருகன் (வழக்காளி).
புலோலிதெற்கு 1 வேலர் பரமுவும் 2. தாமு சிவஞானமும் (எதிரிகள்).

மேற் கூறிய இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் எனக்கு கோட்டால் விடப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் 1963-ம் ஆண்டு பங்குனி மாதம் 29-ம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 9 மணியளவில் பின்னுல் விபரிக்கப்படும் ஆதனங்களை அந்த ஆதனங்களுக்கில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

**ஆதனங்களின் விபரம்:**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறை கோவில்பற்று புலோலி கிழக்கு மழவராயர் குறிச்சிறை.

1. கூத்தாண்டி தோட்டம் இதற்கு யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டு 17001-ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் இணைக்கப்பட்டதும் உலாந்தா மேஸ்தர் கதிர்காமர் கணபதிப்பிள்ளையால் 1926-ம் ஆண்டு தை மாதம் 24-ந்திகதி 4753 இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டதுமாகிய படத்தின்படி நிலப்பரப்பு 21 குளி $16\frac{3}{3}\frac{4}{5}$ இதில் குறித்த படத்தில் 2-ம், 3-ம் துண்டுகளுக்கு நிலப்பரப்பு 4 குளி $13\frac{3}{3}\frac{1}{2}$ இதில் தெருப்புறமாக நிலப்பரப்பு 2-ம் வடக்குப்புறமாக நிலப்பரப்பு 2-ம் நீக்கி நடுப்புறமாக மிகுதிக்கு குளி $13\frac{3}{3}\frac{1}{2}$ தலைவாசல் பனை தென்னைகளும் எல்லை கிழக்கு மாப்பாணர் கனகசபாபதிக்கும் மறுபேருக்குமுடையவாதனம் வடக்கு மேலே சொல்லப் பட்டனைக்குடைய பாகம் மேற்கு ரோட்டு தெற்கு கீழ்க்காணும் 2-ம் ஆதனம் இதில் அடங்கலும் முழுக்காணிக்குள் வடகிழக்குப் பக்கமாகவிருக்கும் புதிதாக வெட்டப்பட்ட கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாக்காலுருத்தும்.

2. ஷெ இறை காணி இதில் தெருப்புறமாக நிலப்பரப்பு 2 வீடு கொட்டில்கள் வேம்பும் புளியும் எல்லை கிழக்கும் தெற்கும் மாப்பாணர் கனகசபாபதிக்கு மறுபேருக்குமுடைய வாதனம் வடக்கு மேற்கூறிய 1-ம் ஆதனம் மேற்கு ரோட்டு இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுதும் இன்னும் முழுக்காணிக்குள் வடகிழக்குப் பாகமாகவிருக்கும் புதிதாக வெட்டப்பட்ட கிணற்றில் தற்குரிய பங்கு வழிவாக்காலும்.

அறவேண்டிய தொகையின் விபரம்:
கோட்டில் வழக்குப் போட்ட தொகைரூ. 1720-00.
வட்டி ரூபாய் 1300/-க்கு 21-8-61 தொடக்கம் 24-1-62 வரைக்கும் ரூ. 38-00.
வட்டி ரூபா 1758/-க்கு 24-1-62 தொடக்கம் 25-1-63 வரைக்கும் ரூ. 87-90.
கோட்டுச்செலவு ரூ. 228-23.
அறவேண்டிய தொகை ரூ. 2074-13.

ஆ. சபாரத்தினம்
வெந்தீஸ்மேஸ்தர்.
வடலிப்பாதி,
தும்பளை,
பருத்தித்துறை,
12-3-63. 765

### மரண அறிவித்தல்

யாழ். அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் திரு. J எமானுவேல் அவர்களின் புத்திரி 12-3-63 இரவு காலமானுர். ஈமக்கிரியைகள் கொன்சேஞ்சி மாதா சேமக்காலையில் 13-3-63-ல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

காரியதரிசி
767 ச. நி. கொ.

வியாபாரம்பெருக
விளம்பரம்செய்க

# "மனிதன் மாறிவிட்டான் பிரச்னை மாறவில்லை"

## சனசமூக ஆண்டுவிழாவில் உதவி அரசாங்க அதிபர்

மாவிட்டபுரம், புதன்

"மனிதன் தோன்றிய காலந்தொட்டு, இன்றுவரை மனித வர்க்கத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்னை ஒன்ருகவே இருந்து வருகிறது. உணவு, உடை, வீடு என்ற எமது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்யும் பிரச்னையே, அந்தப் பிரச்னையாகும். இதைத் தீர்த்துக்கட்ட நாம் நமது உடலுழைப்பினுல் முயல வேண்டும். எமது கைகளும் கால்களும் சோராது தொழில் செய்தால், நாம் வாழலாம்; அத்துடன் நமது நாட்டையும் வாழவைக்கலாம்"

வட பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. சமரவிக்கிரம, கோண்டாவில் கிழக்கு சரஸ்வதி சனமூக நிலையத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட 17–வது ஆண்டுவிழாவிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர். சனசமூக நிலைய ஆண்டு விழாவும் திருவள்ளுவர் விழாவும் ஒன்ருகக் கொண்டப்பட்டன.

திரு. சமரவிக்கிரம மேலும் கூறியதாவது: கற்கால மனிதன் வாழ்ந்த முறைக்கும் இன்றைய வானவெளிக்கால மனிதன் வாழும் முறைக்கும் வித்தியாசம் உண்டு. ஆனுல் பிரச்னை; உணவு, உடை, வீடு பற்றியதுதான். சில நாடுகள் எம்மையெல்லாம், பின்தங்கிய நாடுகள் என்று குறிப்புவதுண்டு. ஆனுல் நாம் பின்தங்கிய நாட்டினர் அல்ல; 'விடுபட்ட' அல்லது வெளியேறும் நாடுகள் என்பதே. பொருந்தும். எனவே, மற்றைய பகுதிகளைப்போல நமது நாடு முன்னேற்றம் அடையவில்லை. எமது முயற்சியின் மூலம் தான் நமது நாட்டை முன்னேற்ற முடியும்."

திரு. கே. பி. ஹரன் பேசும் போது, வள்ளுவன் வகுத்த வழிக்கு அமைய நாமும் வாழ்வதானுல், இன்னு செய்தாருக்கும் நன்மையைச் செய்தல் அவசியம் எனவும் இன பிரச்னை தீர நாம் எல்லோரும் உழைக்க வேண்டுமெனவும் கூறினுர்.

யூனியன் கல்லூரி ஆசிரியர் இ. அம்பிகைபாகன் பேசும் பொழுது, நமது மனம் சுத்தமாக இருந்து, உயர்ந்த இலட்சியங்களுக்காக உழைக்கும் வகையில் பண்பட்டு, "நான்" என்று எண்ணுமல் "நாம்" என்று எண்ணமுடிந்தால், நமது வாழ்க்கை வளம்பெறுமெனவும், வள்ளுவர் வகுத்த வழியும் அதுவே எனவும் கூறினுர்.

திருவாளர்கள் சி. கே. இளையதம்பி, எஸ். ரி. சீவரத்தினம், எஸ். குணரத்தினம், பண்டிதர் ச. அருளம்பலம், சனசமூக நிலைய மேற்பார்வையாளர் கணேசபிள்ளை, காரியதரிசி திரு. பாலச்சந்திரன் ஆகியோரும் பேசினர்.

### தேவை

வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு ஒரு பொருள் பொறுப்பாளரும் ஒரு கொள்வனவு செய்யும் உத்தியோகஸ்தரும் தேவை. தகுதியுடையோர் மாத்திரம் விண்ணப்பித்துக் கொள்ளலாம். விண்ணப்பப் பத்திரங்கள் 23-3-63க்கு முன்னர் சமாசத் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பகாரரின் தகமையும் சம்பளமும்.

(A) பொருள் பொறுப்பாளர் (Storekeeper).
(1) வயது 25—40.
(2) S. S. C. ஆங்கில அறிவுடன்.
(3) கூட்டுறவுப் பயிற்சியில் சித்திபெற்றவர்.
(4) பிணை ரொக்கம் ரூபா 1500/- ஆதனம் அல்லது வீமாக் கொம்பனியின் நம்பிக்கைப்பத்திரம் ரூபா 3500/-
(5) சம்பளம்:- 80/—140/- — 140/—200/-
10x6/- 8x7/50

அதற்குரிய யூனியன் வீத வாழ்க்கைப்படியும்.

(B) பொருள் கொள்வனவு செய்வோர் (Purchasing officer)
(1) வயது 25—40.
(2) S. S. C. ஆங்கில அறிவுடன்.
(3) பிணை ரொக்கம் ரூபா 1500/- ஆதனம் அல்லது வீமாக் கொம்பனியின் நம்பிக்கைப்பத்திரம் ரூபா 5000/-
(4) ஐந்து வருடங்களுக்குக் குறையாத வியாபார அனுபவமுடையோர் விரும்பப்படுவர்.
(5) சம்பளம்:- 125/—200/-
10x7/50

அதற்குரிய யூனியன் வீதவாழ்க்கைப்படியும்.

க. இராமச்சந்திரன்
காரியதரிசி,
வலி-வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், தெல்லிப்பளை.
தெல்லிப்பளை,
13-3-63. 766

### தேவை

ஊதுபத்தி உற்பத்திசெய்ய பத்து முதல் பதினைந்து வயதுக்குட்பட்ட 20 பெண் பிள்ளைகள் தேவை. பயிற்சி அளிக்கப்படும். 18-3-63-க்கு முன் விண்ணப்பிக்கவும்.

வலிமேற்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம், சங்கானை
763

## ஸ்கந்தா வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்

சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்கும், கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்குமிடையே சிநேகபூர்வமான கிரிக்கட் போட்டி நடைபெற்றது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் ஸ்கந்தா ஆசிரியர் கோஷ்டி 88 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

## உபந்நியாசம்

யாழ்ப்பாணம், புதன்

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிஞய ஆலயத்தில்வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு கூட்டுப் பிரார்த்தனைச் சபையாரின் சார்பில் வண்ணை-வைத்தீஸ்வர ஆலயத் தேவஸ்தான வித்துவான். உயர் திரு. க. ஆறுமுகம், "திருவள்ளுவரும் திருக்குறளும்" என்னும் பொருள் பற்றி உபநிங்யாசம் செய்வார்.

## 'அரசாங்க ஊழியர்களுக்கு கடமைஉணர்ச்சிவேண்டும்' —நிதிமந்திரி

கேகாலை, புதன்

"அரசாங்க ஊழியர்கள் தங்களது வேலைகளைச் சரிவரச் செய்வதில்லை. தங்களது தாய் நாடு முன்னேற்றமடைய வேண்டுமென்ற நோக்கத்துடன், நாட்டுப்பற்றுடன் இவர்கள் கடமையாற்றவேண்டும்" என்று கேகாலை பாலிக வித்தியாலயத்தில் நடைபெற்ற களியாட்ட விழாவொன்றில் நிதிமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகெல்ல பேசுகையில் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நாட்டில் இப்பொழுது பொருளாதாரப் பிரச்னை தோன்றியிருப்பது உண்மைதானென்றும் அரசாங்கக் கட்டடங்கள் நிறுவுவதற்கு அதிகமான தொகைப் பணம் செலவழிக்கக்கூடிய நிலையில் இலங்கை அரசாங்கம் இல்லையென்றும் கூறினுர்.

நாட்டில் நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்கவேண்டுமானுல், நாட்டில் பல கைத்தொழில்களும் தோன்றவேண்டும். இதற்கு அரசாங்கத்திற்கு அதிகமான பணம் தேவைப்படுகிறதென்றும் அவர் கூறினுர்.

## இலவசமாக கள் இறக்கலாம்

கொழும்பு. புதன்

சட்டவிரோதமாகத் தயாரிக்கப்படும் 'கசிப்பு' உற்பத்தியை ஒழிப்பதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று எல்லா அரசியல் கட்சிகளும் கேட்டுள்ளன.

"கசிப்பை" ஒழிப்பதற்கு வரி செலுத்தாமல் இலவசமாக கள்ளிறக்குவதற்கு அனுமதி கொடுக்கப்படவேண்டுமென்றும் சாராயத்தின் விலையிலும் பார்க்க 'கசிப்பின்' விலை குறைவாக கொடுப்பதால், 'கசிப்பு' அதிகமான தொகையில் விற்பனை செய்யப்படுகிறதென்றும் பல அரசியல் கட்சிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

இலவசமாகக் கள்ளிறக்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டால்,மக்கள்'கசிப்பை அருந்த' மாட்டார்கள் என்றும் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

## மதிய உணவு விநியோகம்

கொழும்பு, புதன்

பாடசாலைக் குழந்தைகளுக்கு மதிய உணவு விநியோகிப்பதற்காக, நாட்டின் பல பகுதிகளிலும் 26 கூட்டுறவு நிலையங்களை அமைக்கும்படி பாடசாலை சுகாதாரக் கமிட்டி, அரசாங்கத்திற்கு சிபார்சு செய்துள்ளது.

கூட்டுறவு ஸ்தாபனங்களிடம், மதிய உணவுவிநியோகப் பொறுப்பை ஒப்படைத்தால், அவை சுகாதார முறைப்படி தயாரிக்கப் படுகின்றதா என்பதைக் கண்டுபிடிக்க முடியும் என்றும், 'கெயர்' மா வைக் கொண்டு, பிஸ்கட்டுகள் தயரிக்கலாமென்றும் பாடசாலை சுகாதார கமிட்டி அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்துள்ளது.

பாடசாலைக் குழந்தைகளுக்கான மதிய உணவை, இப்பொழுது தனிப்பட்ட "பேக்கறி"கள் விநியோகிக்கின்றன.

## கத்தோலிக்க சங்கம்

உடுப்பிட்டி, புதன்

"கத்தோலிக்க மதத்தின் முன்னேற்றம் இன்றைய வாலிபர்கள் கையில்தான் உள்ளது. வாலிபர் எண்ணினுல் மதத்தையோ அல்லது நாட்டையோ முன்னேற்ற முடியும். உறங்கிக்கிடந்த சீன நாட்டை முன்னேறச் செய்தவர்கள் வாலிபர்கள்."

இவ்வாறு கரவெட்டி கத்தோலிக்க வாலிபர் இண்டாவது ஆண்டு நிறைவு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய திரு. சி. வின்சென்ற் கூறினுர்.

கூட்ட இறுதியில் புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்: ஆர். இ. எம். ஜே. வஸ்ரியன், செயலாளர்: எஸ். எஸ். ஜெகநாதன், தனதிகாரி: ஜீ. மரியாம்பிள்ளை, கணக்குப் பரிசோதகர்: பி. பற்றித்துரைராசா.

யாழ்ப்பாணம், வியாழன்

நீர்வேலி கிராமசபை 12-ம் வட்டாரத்திற்கான இடைத்தேர்தலில் திரு சண்முகம்செல்வரத்தினம் 123 அதிகப்படியான வாக்குகளால் வட்டார உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் திரு. சண்முகம் செல்வரத்தினத்திற்கு 227 வாக்குகளும் திரு. பொன்னம்பலம் நடராசாவுக்கு 104 வாக்குகளும் கிடைத்தன.

# கோட்டா மூலம் பெட்ரேலியபொருள் இறக்குமதி

## அரசாங்கத்திற்கு கம்பனிகளின் ஆலோசனை

கொழும்பு, செவ்வாய்

அரசாங்கம் விதித்த ஒரே தரப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டுவிலைக்கு பெட்ரேலியம் பொருட்களைவிற்பனை செய்வது கஷ்டமென கம்பெனிகள் அரசாங்கத்திற்கு தமது பதிலில் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது. 'கோட்டா' முறையில் பெட்ரேலியம் பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படலாம் எனவும் அவை தமது பதிலில் ஆலோசனை கூறியுள்ளதாக அறியப்படுகிறது.

நேற்றிரவு எண்ணெய்க் கம்பனிகளின் பதில்களை பரிசீலனை செய்யும் பொருட்டு மந்திரி சபை அவசரமாகக் கூடியது. அரசாங்கம் விதித்தஒரே தரப்படுத்தபட்ட கட்டுப்பாட்டு விலைக்கு பெட்ரேலியம் பொருள்களை விற்பனை செய்ய சம்மதிக்கின்றனவா, இல்லையா என்று கம்பனிகளை அரசாங்கம் கேட்டிருந்தது. 'ஷெல்', 'எஸ்ஸோ', கல்டெக்ஸ் ஆகிய மூன்று எண்ணெய்க் கம்பனிகளும் தமது பதிலை அனுப்பி வைத்துள்ளன.

கம்பனிகள் தமது பதிலில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலைக்கு பெட்ரேலியம் பொருள்களை விற்பனை செய்வது கஷ்டமென்று தெரிவித்துள்ளனவாம். வெளிநாட்டு செலாவணியை குறைப்பதே அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலைத் தீர்மாத்தின்நோக்கமாகையால் கோட்டா மூலம் பெட்ரேலியம் பொள்களை இறக்குமதி செய்ய கம்பனிகளுக்கு அனுமதி வழங்குவதன் மூலமும் வெளிநாட்டு செலாவணியை மிச்சப்படுத்தலாம் என கம்பனிகள் தமது பதிலில் யோசனை தெரிவித்துள்ளன. இது விஷயமாக அரசாங்கம் மீண்டும் முற்றிலும் திருப்பி ஆராயும் என தாம் நம்புவதாயும் கம்பனிகள் தமது பதிலில் தெரிவித்துள்ளன. கோட்டா வழங்கப்பட்டால் கோட்டா மூலம் கிடைக்கும் லாபத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்க அனுமதிக்கக் கூடாதென்று கம்பனிகள் தமது பதிலில் ஆலோசனை தெரிவித்துள்ளன.

## மந்திரிசபை கூடுகிறது

### மாற்றுத்திட்டம் ஆராய்வதற்கு

கொழும்பு, செவ்வாய்

நெல் விளைவிப்போரிடமிருந்து கூப்பன் புத்தகங்களை வாபஸ் செய்வதென்ற திட்டத்திற்குப் பதிலாக இன்னொரு மாற்றுத் திட்டத்தை வகுக்கும் பொருட்டு மந்திரி சபையினர் இவ் வாரம் கூடி ஆராய்வார்கள்.

வருடமொன்றுக்கு 23 புசலுக்கு மேலாக நெல் விளைவிப்போரிடமிருந்து கூப்பன் புத்தகங்களை வாபஸ் செய்வதென்று முன்னர் அரசாங்கம் தீர்மானித்திருந்தது. பல எம். பி. க்களும் பார்லிமெண்டில் செய்துகொண்ட புகாரின் பேரில் அத்திட்டம் வாபஸ் செய்யப்பட்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். கூப்பன் புத்தகங்களை நெல்விளைவிப்போரிடமிருந்து வாபஸ் செய்வதால் 40,000,000 ரூபாவை மிச்சப்படுத்தலாம் என அரசாங்கம் எதிர்பார்த்திருந்தது. இந்த 40,000,000 ரூபாவையும் மிச்சப்படுத்துவதற்கான புதிய திட்டத்தை வகுப்பதற்கு இந்த வாரம் மந்திரிசபை கூடுகின்றது.

எது எப்படியிருந்த போதிலும், அரசாங்கம் நெல்விளைவிப்போரை விளைச்சல், இடப்பரப்பு ஆகிய விபரங்களைத் தருமாறு கேட்டுள்ளது. பலர் தங்கள் நெல்விளைச்சல் பற்றிய விபரங்களை அனுப்பி வைக்காததால், அவற்றை அனுப்பி வைப்பதற்கான இறுதித் திகதி பின்போடப்பட்டுள்ளது.

## கொலைவழக்கில் எதிரி விடுதலை

திருக்கோணமலை, திங்கள்

மட்டக்களப்பு துறைநீலாவணையைச் சேர்ந்த சாமித்தம்பி என்பவரை மண்வெட்டியால் தாக்கிக் கொலைசெய்ததாக காசிநாதர் என்பவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் சாட்சியங்கள் திருப்திகரமாயில்லை என்ற காரணத்தினுல் நீதியரசர் எச். டபிள்யு. தம்பையா எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

எதிரிக்காக அட்வக்கேட் சரவணமுத்து வழக்கறிஞர்கள் யு. சி. சில்வா, சோ. இராஜநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

முடிக்குரிய தரப்பில் திரு. டி. எம்.பி. வீரசிங்கா ஆஜரானுர்.

—

மதுரை, மார்ச் 12

மதுரை நகரசபை இன்று டாக்டர் ராஜேந்திரபிரஸாத்தின் மரணத்தையிட்டு ஒரு அனுதாபத் தீர்மானத்தை நிறைவேற்றியபின் கூட்டத்தை ஒத்திவைத்தது.

# 'அமெரிக்காவுக்கு நன்றி செலுத்த வேண்டும்'

## இடதுசாரி ஐக்கியமுன்னணி கூட்டத்தில் திரு: பிலிப் குணவர்த்தன

மாத்தறை, புதன்

"இலங்கைக்கான அமெரிக்க உதவிகள் நிறுத்தப்பட்டதினுல், இங்குள்ள இடதுசாரிக் கட்சியினர் ஒன்று சேர்ந்துள்ளனர். இதற்காக அமெரிக்க அரசாங்கத்துக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்."

உயன்வத்தை மைதானத்தில் நடைபெற்ற இடதுசாரி ஐக்கிய முன்னணிக் கூட்டமொன்றில் மக்கள் ஐக்கிய முன்னனித் தலைவரும் அவிசாவலை எம். பி.யுமான திரு. பிலிப்குணவர்த்தன பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், எண்ணெய்க் கம்பெனிகளுக்கான நஷ்ட ஈடு சம்பந்தமாக, இலங்கைக்கான தனது வெளிநாட்டு உதவிகளை நிறுத்திய அமெரிக்க அரசாங்கம், இடதுசாரிக் கட்சியினரை ஒன்று சேர்த்துள்ளது என்றும் இதை நாம் பாராட்ட வேண்டுமென்றும் கூறினுர்.

அவர் மேலும் பேசியதாவது:

'எண்ணெய் வர்த்தகம் முழுவதையும் இலங்கை அரசாங் 1961-ம் ஆண்டிலேயே பொறுப்பேற்றிருக்கலாம். அப்படி நடைபெற்றிருந்தால் ஒரு ஐக்கிய முன்னணி உருவாக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனம் நல்லமுறையில் வேலைசெய்கிறதாகத் தெரிகிறது. இருந்த போதிலும், எண்ணெய்க் கம்பெனிகள் எல்லாவற்றையும் ஒரே முறையில் தேசியமயமாக்க இப்போதுள்ள அரசாங்கத்திஞல்முடியவில்லைஉதாரணத்துகுசிமெந்து கார்ப்பரேஷனுக்கு, வருடாந்தம் சுமார் 57 லட்சம் ரூபாய் லாபம் கிடைக்கிறது. சில தேசியமய கர்ப்பரேஷனகளில் ஊழல்களும் காணப்படுகின்றன. இதற்கு நிர்வாக சீர்கேடுதான் காரணமாகும்.

டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, திரு. எட்மன்ட்சமரக்கொடி, உட்பட பலர் பேசினர்.

## அலிசாப்ரி அடுத்த மாதம் விஜயம்

கெய்ரோ, மார்ச் 13

பீக்கிங்கிலிருந்து திரும்பும் வழியில் ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதமர் விங்கமாண்டர் அலிசாப்ரி அடுத்தமாத இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்வாரென்று அறிவிக்கப்படுகிறது. திகதி நிச்சயிக்கப்படவில்லை.

—

## பிடோல்ட்டுக்கு அரசியல் தஞ்சம்

### பிரான்ஸ் ஆட்சேபிக்கவில்லை

பாரிஸ், மார்ச் 13

பிரான்சின் முன்னுள் பிரதமர் திரு. பிடோல்ட்டுக்கு மேற்கு ஜெர்மனி அரசியல், தஞ்சம் அளிப்பதில் தமக்கு ஆட்சேபமில்லையென்றும் ஆனுல் ஜனுதிபதி டிகோலுக்கு எதிரான நடவடிக்கையை அவர் கைவிட்டுவிட வேண்டுமென்று பிரஞ்சு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தமக்கு தஞ்சம் அளிக்கும்படி திரு. பிடோல்ட் ஜெர்மன் அரசாங்கத்துக்கு இன்னும் முறையாக விண்ணப்பிக்கவில்லை.

—

## ரஷ்யா நிலக்கரி அனுப்பாது

மாஸ்கோ, மார்ச் 13

பிரான்சில் நடைபெற்றுவரும் சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் முடிவடையும்வரை நிலக்கரி அனுப்புவதில்லையென்று சோவியத் யூனியன் முடிவு செய்துள்ளது. இந்த வேலை நிறுத்தத்தில் இரண்டு லட்சம் தொழிலாளர் ஈடுபட்டுள்ளனர்.

—

## பொற்கொல்லருக்கு முதலிடம்

சென்னை, மார்ச் 13

வேலை தேடித்தரும் ஸ்தாபனங்கள் பொற்கொல்லர்களுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் முக்கிய கவனம் செலுத்தவேண்டுமென்றும் வயதுக் கட்டுப்பாடு தராதர நிபந்தனைகளைக் கருதாது அவர்களின் பெயர்களைப் பதிவுசெய்யவேண்டுமென்றும் தமிழ்நாடு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

—

## பாக்.—சீன ஒப்பந்தம்

### காஷ்மீர் பிரதமர் கருத்து

ஸ்ரீநகர், மார்ச் 13

சீனு உலகில் தனித்து நிற்கும்பொழுது அதனுடன் பாகிஸ்தான் வலிய உறவு கொண்டாடுவது விந்தையாக இருக்கிறதென்று ஜம்மு காஷ்மீர் பிரதமர் பக்ஷி குலாம் முகம்மது காஷ்மீர் சட்டசபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானுக்கும் சீனுவுக்கும் எல்லைப் பிரச்னை இருந்ததில்லையென்றும் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த காஷ்மீர் பிரதேசத்தில் பெருந்தொகையான பகுதியை சீனுவிடம் பாகிஸ்தான் கொடுத்துவிட்டதென்றும் பாகிஸ்தான்—சீன ஒப்பந்தம் சட்டவிரோதமானதென்றும் பக்ஷி குலாம் முகம்மது தெரிவித்தார்.

இந்திய—சீன வேற்றுமை நீங்கி உடன்பாடு ஏற்பட்டாலும்கூட சீனுவுக்கு எதிராக பாகிஸ்தான் சேராது என்று பாகிஸ்தான் தெரிவித்திருப்பது அந்த நாட்டின் தலைவர்களுடைய மனப்போக்கைக் காட்டுகிறது என்றும் காஷ்மீர் பிரதமர் தெரிவித்தார்.

—

# "ஆசிரியர்களிடையே தோன்றிய குழப்பங்களுக்கு கல்வி இலாகாதான் பொறுப்பு"

—திரு. பீட்டர் சில்வா

அநுராதபுரம், புதன்

"தாங்கள் உதவிபெறும் பாடசாலை ஆசிரியர்கள் என்ற முறையில் அந்த ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பிரச்னையும் இருக்கவில்லை. இடவசதி பிரச்னையோ அல்லது தளபாட பற்றுக்குறையோ அவர்களுக்கிருக்கவில்லை. அத்துடன் எந்தவிதமான அரசியல் தலையீடும் இப்பாடசாலை ஆசிரியர்களுக்கிருக்கவில்லை. ஆனுல், தேசிய கல்விமுறை வந்ததும் எல்லாக் குழப்பங்களும் தோன்றிவிட்டன" என்று ஸ்ரீ லங்கா ஜாதிக ராஜய குரு சங்கமயாவின் அநுராதபுரக் கிளைக் கூட்டத்தில் அதன் தலைவர் திரு. பீட்டர் சில்வா பேசுகையில் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தேசிய கல்வி முறை வந்ததும், உதவிபெறும் பாடசாலைகளிலிருந்த ஆசிரியர்கள், அரசாங்க பாடசாலை ஆசிரியர்களுடன் சேர்ந்தார்கள் என்றும் இப்போது தோன்றியுள்ள எல்லாக் குழப்பங்களுக்கும் கல்வி இலாகாதான் முழுக்காரணம் என்றும் கூறினுர்.

அவர் மேலும் பேசியதாவது: "கல்வி இலாகா முற்ருக திருத்தியமைக்கப்படாவிட்டால், கல்வியில் எந்தவிதமான முன்னேற்றமும் இருக்காது. ஆசிரியர்களிடையே இப்போது தோன்றியுள்ள குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் கல்வி இலாகாதான் பொறுப்பாகும்."

ஸ்ரீ லங்கா ஜாதிக ராஜய குரு சங்கமயாவின் காரியதரிசி திரு எஸ். ஆரியவன்ச பேசுகையில், இந்த நாட்டிற்கு இப்பொழுது 17,000 ஆசிரியர்கள் தேவைப்படுகிருர்களென்றும் நாளுக்கு நாள் இந்த நிலைமை மிகவும் மோசமாகிறதென்றும் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: 'கொழும்புக்கு அருகிலுள்ள பாடசாலைகளில்கூட ஆசிரியர்கள் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. 5000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று கல்வி மந்திரி திரு. பதியுயூன் மஹமூத் கூறியிருந்தார். ஆனுல் இது எப்பொழுது நிறைவேற்றப்படும் என்பது தெரியாது.

ஆசிரியர்களை இப்பொழுது எதிர்நோக்கியுள்ள பிரச்னை, அரசியல் தலையீடாகும். கல்வி கமிஷன்களின் சிபார்கள் அமுலாக்கப்படுமானுல், அதிகமான பிரச்னைகள் தீர்க்கப்பட்டுவிடும்.

1961-ம் ஆண்டின் கடைசியிலிருந்து விஞ்ஞான பாடங்கள் யாவும், சிங்களத்தில் போதிக்கப்படவேண்டும் என்று கல்வி இலாகா தீர்மானித்திருந்தது. ஆனுல், 1963-ம் ஆண்டிலிருந்து விஞ்ஞான பாடங்களை ஆங்கிலத்தில் கற்பிக்கவேண்டும் என்று கல்வி இலாகா முடிவுசெய்திருக்கிறது. எல்லா விஷயங்களுக்கும் அரசாங்க பார்லிமெண்டரி கமிட்டிதான் முடிவுசெய்ய வேண்டும் என்று கல்வி மந்திரி கூறுகின்ருர். ஆனுல் அந்தக் கமிட்டி, கடைசியாக 1955-ம் ஆண்டில்தான் கூடியது!

—

## புதுடில்லியில் மார்ஷல் ஷாவலி

புதுடில்லி, மார்ச் 13

ஆப்கானிஸ்தான் மன்னரின் உறவினரான மார்ஷல் ஷாவலி நேற்று புதுடில்லி வந்துசேர்ந்தார். அவரை பெருந்திரளான மக்கள் பாலம் விமான நிலையத்தில் வெகு உற்சாகத்துடன் வரவேற்றனர். மாலையில் பிரதமர் நேருவையும் உபராஷ்டிரபதி டாக்டர் ஸாகிர் ஹுசைனையும் மார்ஷல் ஷாவலி சந்தித்தார்.

—

## 'பணத்தை அரசாங்கம் வீணுக்குகிறது'

கல்கிசை, புதன்

'ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியின்போது, இந்த நாட்டுக்கு எந்தவிதமான அமெரிக்க உதவியும் கிடைக்கவில்லை. அமெரிக்க உதவியில்லாமலேயே இந்நாடு ஆளப்பட்டது.' என்று வத்துமுல்லை ஐக்கிய தேசிய கட்சி இளைஞர் இயக்கத்தின் முதல் வருடாந்தக் கூட்டத்தில் கொழும்பு தெற்கு முதல் எம். பி. திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பேசுகையில் கூறினுர்.

திரு. ஜயவர்த்தன தொடர்ந்து பேசுகையில் அமெரிக்க உதவிகளை ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாத போதிலும் பல பிரச்னைகளைத் தீர்த்துக் கொவதற்கு காமன்வெல்த் நாடுகள் உதவி செய்தன என்று கூறினுர். வரிகள் மூலமாக மக்களிடமிருந்து அறவிடப்படும் பணத்தையும் மற்றும் சேமிப்புப் பணத்தையும் இப்போதுள்ள அரசாங்கம் என்ன செய்கிறது என்பது எனக்குத் தெரியாது என்றும் அவர் கூறினுர்.

—

## இந்திய திரைப்பட விழா

வார்சா, மார்ச் 13

இந்தியத் திரைப்பட விழாவொன்று நேற்று வார்சாவில் ஆரம்பமானது. இந்த விழாவுக்கு போலந்து கலாசார மந்திரியும் சமுகமளித்திருந்தார்.

—

## மேற்பார்வையாளர்

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு கௌரவ மேற்பார்வையாளராக பட்டினசபைத்தலைவர் திரு. மு. திட வீரசிங்கம் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

—

## அமெரிக்கா, பிரி. அங்கீகாரம்

டமாஸ்கஸ், மார்ச் 13

சிரியாவின் புதிய அரசாங்கத்தை அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி, சைபிரஸ், சூடான் முதலிய நாடுகளும் அங்கீகரித்துள்ளன.

டமாஸ்கஸில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது.

## மணி வாக்கு

ஏழைகளுக்குப் பொருளாதாரமே ஆத்மீகமாகும். பட்டினி கிடப்பவருக்கு உணவு கொடுத்தால் உங்களைக் கடவுளாக அவர்கள் கும்பிடுவர். அவர்கள் வேறெதுவும் எண்ண முடியாது.

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு
பங்குனி மீ 1 உ (14-3-63)

## 'கலைப்புலவர்'

கலைப்புலவர் நவரத்னம் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து இன்றுடன் ஓராண்டாகின்றது. அவர் நினைவாக சில கட்டுரைகளை இன்று "ஈழநாடு" வெளியிடுகின்றது கலைகள், இலக்கியம், சமயம் கல்வி, சமூகம் முதலிய பல்வேறு துறைகளிலும் கலைப்புலவர் அவர்கள் செய்துள்ள பணிகள் கொஞ்சமன்று. பிரதேச கலாமன்றத்தின் காரியதரிசியாகவுமிருந்து நல்ல தொண்டாற்றியுள்ளார். அவ்வளவு பொதுச்சேவை செய்துள்ள பெரியாரின் நினைவை ஈழத்துப் பொதுமக்கள் இதற்குள் மறந்துவிட்டார்களோ என்று கருதும்படி இன்றைய நிலையுள்ளது

மேலைநாடுகளில் அவர் பிறந்திருப்பின், கலைப்புலவருக்காக எவ்வளவோ ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். இங்கு பொது மக்களுக்காகவே வாழ்ந்து, பலதுறைகளிலும் நல்லதொண்டு செய்திருப்பினும், இங்கு இதுவரை அவரது ஞாபகத்துக்காக பிரதேச கலாமன்றமோ, வேறு பொதுஸ்தாபனங்களோ எவ்வித முயற்சியுமெடுக்காதது பெரிதும் வருந்தத்தக்கதாகும். பொதுப் பணிகளில் ஈடுபட்டவர்களை நன்றியுடன் போற்றுவது நம் கட்மையாவதுடன், இதன் மூலமே மற்றவர்களும் உற்சாகத்துடனே முன்வந்து, இவ்வித பணிகளைச் செய்யவும், இதனல் நாடும் சமூகமும் நன்மையடையவும் முடியும்.

கலைப்புலவரவர்கள் மிகப்பயனுள்ள, அரிய நூல்களை தமது வாசஸ்தலத்தில் உயிரினும் மேலாக மதித்து சேமித்து வைத்திருக்கின்ருர். அவர் வீடே ஒரு கலைக்கோவில் மாதிரி. பிரிட்டனிலே ஷேக்ஸ்பியரும் அவர் மனைவியாரும் வசித்த வீடுகளைப் பொது மக்களின் சார்பாக விலைக்கு வாங்கி, டிரஸ்டிசபை வைத்துப் பெருமையுடன் பேணிக் காத்து வருகின்றது.

'ஸ்டாபோர்ட் அபான் ஏவன்' எனும் அவ்விடத்துக்கு, வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான யாத்திரிகர் விஜயம் செய்து, கட்டணம் கட்டி, டிக்கெட் வாங்கி, கியூ வரிசையில் நின்று தினம் அவ்வீடுகளைப் பார்வையிடுவதைக் காணலாம். அது பெரிய யாத்திரை ஸ்தலமாகிவிட்டது. அதுபோல் இங்கு கலைப்புலவரின் மனையும் செய்யப்படல் வேண்டும்.

அப்பெரியார் இருக்கையில் வெளி நாடுகளிலிருந்து வரும் பல பிரமுகர்களையும் அவர் வரவேற்று உபசரித்து வந்தார். கலைக் கோவில்போல உள்ள அவரது வீடும் நூல் நிலயமும், யாழ்ப்பாணத்துக்கே பெருமை தருவன. அவற்றை அவரது துணைவியார் அவர் இருந்த காலத்தில் இருந்ததுபோல் அப்படியே புனிதமாக வைத்துக் காத்து வருகின்ருர்கள். இதைப் பொதுச் செல்வமாக்கி, தகுந்த டிரஸ்டிகளை நியமித்து, அவரது துணைவியாரின் மேற்பார்வையிலேயே அந்தக் "கலைக் கோவில்" பாதுகாக்கப்பட ஒழுங்கு செய்வது பலவிதங்களிலும் பொருத்தமாகும். பிரதேச கலாமன்றம் இதற்கான முயற்சி எடுக்கலாம். இவ்வித முயற்சி எடுக்கப்பெறின் பொதுமக்களும் இதற்கு வேண்டிய உதவிபுரிந்து ஒத்துழைத்து தங்கள் நன்றியையும், மரியாதையையும் தங்கள் கலைப் புலவருக்குத் தெரிவிக்கலாம். இப்படிச் செய்வது யாழ்ப்பாணப் பொதுமக்கள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொண்டதாகவுமிருக்கும்.

# திரு. நவரத்தினம் அவர்களின் ஆழ்ந்த செந்நெறிகள்

— 'ஜனகா' —

"கங்குல்பக லற்றதிருக் காட்சியர்கள் கண்டவழி
யெங்கு மொரு வழியே
எந்தாய் பராபரமே"
— தாயுமானவர்.

"ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்
ளேணங் கொட்டாமோ"
— திருவாசகம்.

இவ்வுலகில் உள்ள சுகதுக்கங்களுக்கமைந்தஜடதேகத்தில் ஆத்மீக எழுச்சியைத் தூண்டி, அனுபவித்து அமைதியற்ற மனத்தை அடக்கி சுத்த நிலயடைந்து உள்ளொளியும் ஆனந்தமும் நிறைந்த நித்திய நிலையான அநுபூதியில் அமிழ்ந்து வாழ்வதே இந்துசமய பாரம்பரிய பண்பாடென தன்சீவியத்திலும், பேச்சிலும், எழுத்திலும் விளக்கி வாழ்ந்தவர் காலஞ்சென்ற நவரத்தினமவர்கள். காந்தியடிகள் தான்பங்கு பற்றிய செயல்களிலும் இயக்கங்களிலும் சொல்லியவாறே இவரும் தனது ஆத்மீக வளர்ச்சியையும் சமுதாயத்தில் ஆத்மீக எழுச்சி ஓங்கி வளர்வதையுமே பெரு நோக்கங்களாகக் கடைப்பிடித்துக் கற்பித்து வந்தார்.

பாரதநாட்டில் இக்காலத்தில் தோன்றிய ஆத்மஞானிகளுள் ஒருவராக வாழ்ந்து இந்துசமய சுருதி நூல்களையும் அவைகளின் விளககங்களையும் நன்கு கற்றுணர்ந்து இவைகளின் உண்மைகளை மேல்நாட்டின் தத்துவஞான விஞ்ஞான முடிபுகளுடன் ஒப்பிட்டுப் படித்து, இந்துசமய தத்துவஞான முடிபுகளை இக்கால முறைகளுக்கேற்ப விளக்கஞ் செய்தார். இந்திய ரிஷிகளினதும் மற்றும் பெரியார்களினதும் தரிசனங்களை இக்காலத்தில் மேல்நாட்டில் வெளிவந்துள்ள பேரின்பதரிசன ஆராய்ச்சி முறையில் ஒப்பிட்டுப் படித்து இந்திய சிவாநுபூதச் செந்நெறியை பாரத நாடு உலகிற்கு அளிக்கும் பெரும் நன்கொடையாக முயற்சித்த தொண்டர்களில் திரு. நவரத்தினமும் ஒருவர்.

தத்துவஞானப் பேராசிரியர் ஸி. ஈ. எம். ஜோட் அவர்கள் கீழைத்தேய தத்துவஞான எதிர்த்தாக்குதல்கள் (Counter attack from the East) என்னெரு தொகுப்பு நூலை சமீப காலத்தில் வெளியிட்டுள்ளார். இதுபோன்றதொரு தொகுப்பில் வருங்காலத்தில் கலைப்புலவர் நவரத்தினவமர்களும் மதிப்புக்குரிய இடத்தைப் பெறுவார் என்பதற்கு யாதேனும் சந்தேகமில்லை.

இந்திய சமயாசாரியார்களும் தத்துவஞானிகளும் வெளியிட்டுள்ள முடிபுகளைவிட இந்தியக் கலைகளின் அடிப்படை நோக்கங்களும் கொள்கைகளும் இந்துக்களின் வீடமைப்பும் தினசரி வாழ்க்கை ஒழுக்கங்களும் மனிதரின் சீவியத்தில் சிற்றின்ப நுகர்ச்சிகளுக்குப் பிரதான இடம் கொடுக்காமல் சாந்தமும் சுகமும் ஒளியும் செறியும் வகையில் சீவிப்பதற்கும் பேரின்ப நுகர்ச்சிக்குச் சாதனமாக இருப்பதற்குமாகவே இந்தியக் கலை அடிகோலப்பட்டதென்பது திரு. நவரத்தினமவர்களின் தீர்க்கமான முடிபாகும்.

அதுபோன்ற உயர்ந்த அடிப்படை நோக்கமுள்ள சமுதாயத்தின் பண்பாட்டை இழந்த பாரத நாட்டை ஸ்ரீமத் சுவாமி விவேகாநந்தரும் அவர் போன்ற நவீன தவப் புருஷர்களும் தட்டியெழுப்பி மறுமலர்ச்சி துலங்கச் செய்தனர். பாரத நாட்டை மீண்டும் உலகிற்கு பெரும்பாலும் ஆத்மீக சேவைகளையும் ஞானச் சுடர்களையும் அர்ப்பனம் செய்யும் புண்ணிய பூமியாகத் திருத்தியமைக்கும் பெருந்தொண்டில் திரு. நவரத்தினம் தம் இளமைப் பிராயந்தொட்டு மறையும் வரை ஒரு சேவகனகச் சீவித்து வந்தார்.

பாரத நாட்டிலும் ஈழத்திலும் ஒடுங்கி மறைந்து அற்றுப்போகும் நிலையிலிருந்த கலைகளையும் கைப்பணிகளையும் புத்துயிர் கொடுத்து அவைகளைத் திரும்பவும் ஓங்கி வளரச் செய்ய முன்னணியில் நின்று தமது பேச்சாலும் எழுத்தாலும் நவரத்தினமவர்கள் கிறந்த தொண்டாற்றி வந்தாரென்று ஈழத்திலும் தென் இந்தியாவிலும் புகழுடன் கருதப்பட்டு வந்தார் அவர் கலை கைப்பணி வளர்ச்சிகளில் ஈடுபட்டிருந்த காலத்தில் இந்தியாவின் கலைநோக்குகளை நன்கு கற்றறிந்து டாக்டர் ஆனந்தக்குமாரசுவாமி ரவீந்திரநாத் தாகூர், சேர் ஜோன் வூட்ரூவ் போன்ற பெரியோர்களின் இந்தியக் கலை விளக்கங்களை அடிப்படையாக ஆதரித்து எந்தக் கலையாவதும் மனிதனுக்கு ஒரு இமைப்பொழுதிலாகிலும் சாந்தத்தையும் சுகத்தையும் செறியச் செய்யாவிடில் அது உண்மைக் கலையாகாது என்று அறுவுறுத்தி வந்தார். நடனம், சங்கீதம், சிற்பம் முதலான கலைகள் பேரின்பத்திற்கு அருகாமையாகிய அமைதியையும் ஆனந்தத்தையும் அளிககக் கூடியதாயிருக்க வேண்டுமென்பது அவரது கொள்கையாயிருந்தது. சிற்பமும் ஓவியமும் அவைகளின் அருவ உருவத்தில் அமைதியும் ஆனந்தமும் ததும்பி, தெய்வீக வடிவம் துலங்கிக் கொண்டிருக்க வேண்டுமென்பது அவரின் கலைக்கருத்தாகும். இத்தகைய வடிவமில்லாத இக்கால மேல்நாட்டு சிற்ப ஓவியத்தை அவர் ஒரு காலமும் பொருட்படுத்தி புகழ இயலாத நிலையிலிருந்து வந்தார்.

இவர் இளம்பராயம்தொட்டு இந்திய முறையில் ஆத்மீக ஞானமடைவதை விரும்பி வாழ்ந்து இராமகிருஷ்ணர், விவேகானந்தர் காட்டிய வழியில் ஒழுகி, தனது குருவின் முறையில் தர்சனமனுபவித்து வாழ்ந்தார். இந்திய தர்சன முறைகளையும் மேல்நாட்டுத் தர்சன சாஸ்திரங்களையும் நன்கு கற்று விளங்கும் செல்வாக்குடையவராய் வாழ்ந்து வந்தார். இவர் அனுபவத்தாலும் கற்றறிவினுலும் கண்ட உண்மையால் இறுதிக்காலத்திற்குமுன் சில காலமாக சிவாநுபூதிச் செந்நெறியானது ஒன்றிலும் கட்டுப்படாத சுத்த அநுபூதிநெறியென்று சுவையுடன் விளக்குவார். உபநிடத ரிஷிகள் காட்சிகொடுத்த முறையிலும் திபெத் சீன தேசத்தில் துலங்கிய பௌத்த ஞானிகள் காட்சிகொடுத்த முறையிலும் இவ்வநுபூதி நெறியானது எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு தன்னந்தனியாயிருந்த இடத்தில் அனுபவிக்கும் அநுபூதிநெறியே தவிர இதற்கு யாதொரு சொப்பனங்களும் அசிரீரி வாக்குகளும்யாதொருமெய்மறத்தலோ, பரவச நிலையோ ஒன்றியமையாத லட்சணங்களாகாவென்று மேனுட்டுத் தத்துவ ஞானி டபிள்யு. ரி. ஸ்ரேஸ் என்பார் எழுதிய "அநுபூதியும் தத்துவஞானமும்" (Mysticism & Philosophy) என்னும் நூலின் அடிப்படைக் கொள்கைகளே சரியெனப் பாராட்டிப் பேசுவார்.

## விஞ்ஞானமும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாகிவிட்டதெனலாம். பேற்ரம் றசல் அவர்கள் கூறும் வண்ணம் இது தத்துவ ஞானமன்று. பௌதிகசாஸ்திரத்தின் முடிந்த முடிபேயாம்.

இக்காலப் பௌதிக சாஸ்திரிமின் அணுக்களை நிலையான பொருள்களாகக் கருதுவதில்லை. "பௌதிக சாஸ்திர அறிவின் வளர்ச்சி காரணமாகக் காலப் போக்கில், சடவாதம் அழிந்துவிட்டதெனலாம். ஆகவே சமயமும் விஞ்ஞானமும் முரணின்றிக் கைகோர்த்து உலாவலாம். என எமக்கு அறிவிக்கப்படுகின்றது" என்கிருர் டாக்டர் மக்டூகல் என்னும் பிரபல உளவியல் ஆராய்ச்சியாளர்.

## வவுனியா கொலைவழக்கு
### இன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், வியாழன் வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் வவுனியா கொலைவழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, எதிரியின் வழக்கறிஞர் திரு. எம். பாலசுந்தரமும், முடிக்குரிய வழக்கறிஞர் திரு. வேக்விபோலும், தங்கள் தொகுப்புரையை முடித்துக்கொண்டார்கள்.

1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ம் திகதி வவனியாவில், இராமசாமி வரதராசா செட்டியாரை, மயில்வாகனம் சேனதிராசா என்பவர் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரியின் சார்பில் திரு. எம். பாலசுந்தரம், திரு. கே. வி. எஸ். சண்முகநாதனின் உதவியுடனும் திரு. எஸ், நடராசா, திரு. எஸ வல்லிபுரம் ஆகியோரின் அனுசாரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு. ஆர். கோபாலரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார்.

நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தமது தொகுப்புரையை ஆரம்பித்துள்ளார். தீர்ப்பு இன்று வழங்கப்படுமென எதிர்பாக்கப்படுகிறது. விசாரணை இன்றுகாலைவரைத்திவைக்கப்பட்டுள்ளது.

## ஐயாறன்
### எழுதுவது

காமாலைக் காரனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் என்று ஒரு பழமொழி உண்டு. நமது தம்பதெனிபா எம். பி. யான ஆர். ஜி சேனநாயக்காவுக்கு, மலைநாட்டுத் தமிழரெல்லாமே "கள்ளததோணிகள்" தான். இன்னும் சிறிதுகாலம் போனுல் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் அனைவருக்கும் கூட அவர் அந்தப் பட்டப் பெயர் சூட்டிவிடக்கூடும்!

அமெரிக்கா கொடுக்கும் இலவச பாணையும் பாலையும் மறுக்கப்படாதென்கிருர் ஆர். ஜி. ரொம்பச்சரி. ஆனல் இதைக் கூறுகையில் கள்ளத் தோணிகளுக்கு வகுப்புத்துவேஷத்துடன் தாக்க அவர் மறக்கவில்லை. "10 லட்சம் மலைநாட்டுத் தமிழருக்கு வேலை கொடுத்து, சிங்களவருக்கு வேலையில்லாமற் செய்வது அரசாங்கத்துக்கு வெட்கமில்லாதபோது, அமெரிக்க இலவச பாணையும் பாலையும் வாங்கிக்கொள்வதில் என்ன வெட்கம்?" என்று மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் ஒரு முடிச்சுப்போடுகிருர்.

அவருக்கு ஒரு விஷயம் தெரியுமோ தெரியாதோ! இலங்கையிலுள்ள எல்லா பள்ளிக்குழந்தைகளுக்குமே வேற்றுமையின்றி பாணும், பாலும் கொடுக்கவேண்டுமென்று அமெரிக்கா இந்தத் தர்மம் செய்கின்றது. ஆனல் பரம ஏழைகளான மலைநாட்டுத் தொழிலாளரின் குழந்தைகளுக்கு இந்த அமெரிக்கா தர்மப் பாணும், பாலும் கொடுப்பதில்லை! "தர்மதுவீபம்" எனப்படும் நம் இலங்கையில் 'தர்மம்' படும்பாடு இப்படி!

* * *

இதுபோகட்டும், பரம்பரை பரம்பரையாக இலங்கையிலே பிறந்து, இலங்கையிலே வளர்ந்து, இலங்கை மண்ணேடு மண்ணுகப்போகும்மலைநாட்டுத் தமிழரை, "கள்ளத்தோணி" என்று ஆர். ஜி. துவேஷவிஷம் கக்குவதில் வியப்பில்லை. ஆனல் அவர் இப்படிக் கூறுவதை, இலங்கையிலே மிகப் பொறுப்புள்ளதாகக் கூறப்படும் "டெயிலி நியூஸ்" பத்திரிகையும் அப்படியே "கள்ளத் தோணி" என்று பிரசுரிப்பது தான் எனக்கு வியப்பாகவும் மனவேதனை அளிப்பதாகவுமுள்ளது.

ஓர் அரசியல்வாதி இப்படி எங்கோ ஒரு மூலையில் வகுப்புத்துவேஷவிஷம் கக்குவதை, பொறுப்புவாய்ந்த ஒரு பத்திரிகை, ஊரெல்லாம், நாடெல்லாம், உலகெல்லாம், ஏன் பரப்பவேண்டும்? மலைநாட்டுத் தமிழரை எல்லாம் இப்படி, கேவலமாகத் தூற்றும் பிரசாரத்துக்கு பொறுப்புவாய்ந்த டெயிலி நியூஸ் பத்திரிகை இப்படி ஏன் ஆதரவளிக்கவேண்டும்? அப்பத்திரிகையே இப்படியான துவேஷப்பிரசாரத்தைக் கூச்சமின்றிச் செய்யுமாயின், மற்றச் சிங்களப் பத்திரிகைகளைப்பற்றிக் கேட்கவேண்டுமா?

அரசியல்வாதிகள் செய்யும் இவ்வித விஷமங்களை உடனுக்குடன் வன்மையாகக் கண்டித்து அவர்களைத் திருத்த வேண்டியது பொறுப்புள்ள பத்திரிகைகளின் கடமை. அப்படி இருக்க, டெயிலி நியூஸ் போன்ற பொறுப்புள்ள பத்திரிகை, ஆர். ஜி. யைக் கண்டிப்பதற்குப் பதில், அவர் கக்கிய துவேஷ விஷத்தை, நாடெல்லாம் பரப்புவதாயின், அதற்கு என்ன செய்வது?

சட்டவிரோதமாகச் சிலர் இங்கு வந்திருக்கலாம். அதைத் தடுக்க இரு அரசாங்கங்களும் தீவிரநடவடிக்கைகளை எடுத்தே வருகின்றன. ஆனல், இதை முன்னிட்டு, மலைநாட்டில் பரம்பரையாக வசித்து உழைத்து, கண்யமாக வாழும் ஒரு பெரிய சமூகத்தையே

8 ம் பக்கம் பார்க்க

# விஞ்ஞானமும், சமயமும்

## கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள்

**காலஞ்சென்ற கலைபுலவர் "விஞ்ஞானம், சமயம், தத்துவஞானம்" என்ற தலையங்கத்தில் எழுதிய கட்டுரையின் முதல்பகுதி இங்கே பிரசுரிக்கப்படுகிறது**



கலைப்புலவர் திரு. நவரத்தினம் அவர்கள் சில வருடங்களுக்கு முன் புதுடில்லியில் நடைபெற்ற எழுத்தாளர் மகாநாட்டுக்குச் சென்றிருந்தசமயம் காலஞ்சென்ற டாக்டர் ராஜேந்திரப்பிரசாத்தைச் சந்தித்தார்.

நாம் இன்று விஞ்ஞானமயமாக விளங்கும் உலகத்தில் வாழ்கின்றோம். இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்குமுன் சைவமக்கள் எதை எழுதத் தொடங்கினும் "சிவமயம்" என எழுதத் தொடங்குவது ஒருமரபாக இருந்தது. அச்செயல் இன்று அர்த்தமற்ற குருட்டு நம்பிக்கையாகி விட்டது. அப்படிச் செய்பவர் அநாகரிகப் பேர்வழிகளாக இன்று மதிக்கப்படுவாரெனக் கூற வேண்டும் இன்று விஞ்ஞானத்தில் நம்புவது தான் முற்போக்கென மதிக்கப்படுகின்றது. முற்காலத்தில் எதற்கும் பிரமாணமாக சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர் கூறுகின்றனர்; மெய்கண்டார் அருணந்தி, தாயுமானவர் கூறுகின்றனர் எனக்கூறிவந்தோம். இன்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர் என்று கூறுவதால் தான் நாம் சொல்வதற்கு மதிப்பு ஏற்படும். சுருங்கக் கூறின் எங்கள் வாழ்வும் கருத்துகளும் நம்பிக்கைகளும் விஞ்ஞானமயமாகி விட்டனவெனலாம். அணுவைப் பிளந்தமனிதன் வான வெளியில் பறந்துகொண்டு நித்திரை செய்யத் தொடங்கியமை ஆச்சரியம். வானவெளி வீரன் என கருதப்படும் ககாரின் தான் கடவுளை வானவெளியில் காணவில்லை எனக்கூறிவிட்டார். கடவுள் பூமியிலும் இல்லை வனத்திலும் இல்லை என்பதற்குக் ககாரினது பிரத்தியட்சப் பிரமாணம் சாட்சி பகருகிறது இவ்விதமாகவெல்லாம் மனிதனின் கருத்தையும் வாழ்க்கையையும் ஈர்த்துச் செல்லும் விஞ்ஞானம் என்பது யாது? அது கண்டறிந்த முடிவுகள் எவை? அவற்றால் மனிதன் அடையக்கூடிய நிலைமையென்னவென்பதை நாம் கருத்தூன்றிச் சிந்திக்க வேண்டியனவாம்.

உலகத்தில் இரு அடிப்படைப் பொருள்கள் உண்டு. அவை உயிர், சடம் என்பனவாம். இவ்விரண்டின் சேர்க்கையால் ஏற்பட்டதே உலக தோற்றம் அல்லது பரிணமம் என்பது விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொள்ளும் முடிவு. சித்துத்தன்மை அல்லது அறிவுத்தன்மையுடைய பொருள் உயிர்; சித்துத்தன்மை அற்ற பொருள். சடம் அல்லது அசித்து எனச்சமய நூல்களும், தத்துவ ஞானநூல்களும் கூறுப. இவையிரண்டும் ஒன்றோடொன்று தொடர்பற்ற பொருள்களாம்.

விஞ்ஞானிகள் இக்காலத்தில் இவ்விரண்டைப் பற்றியும் இருவிதமான அபிப்பிராயம் கூறுகின்றனர். சடத்தில் இருந்தே உயிர் தோன்றியது; ஆனதினால் மூலப்பொருள் சடமே என்பது ஒரு சாரார் கொள்கை. இதை ஆங்கிலத்தில் "Material Monism" சடமுதற் பொருள் வாதம் என்றும், சடப்பரிணம வாதம் என்றும் கூறுபர். மற்றையோர் உயிர் சடத்தினின்றும் புறம்பானது; அது தனது தேவைக்கேற்பச் சடத்தை அமைத்துக் கொள்ளுகின்றதென்பர். இக்கொள்கையை தத்துவ ஞானரீதியில் நிலைநாட்டியவர் பிராஞ்சு தேசத்து கென்றி போர்க்சன் என்பவரேயாவர். அவரது கொள்கை "Creative Evolution" "உயிர்பரிணமம்" என இன்று வழங்கப்படும். இவரது முடிபுகளை இதுவரை ஏவரும் தக்க நியாயங்கள் காட்டி மறுக்கவில்லை. எனவே உயிர்வேறு, சடம் வேறு என்னும் கொள்கையின் அடிப்படையில்தான் எமது கட்டுரை விரியும் என்பதை நாம் முதற்கண் கூறிக்கொள்ளுகின்றோம்.

மனிதன் என்கின்றபொருளை எடுத்துக்கொண்டால் அவன் உயிர் அல்லது ஆன்மா என்கின்ற பொருளாலும், தேகம் என்கின்ற பொருளாலும் ஆக்கப்பட்டிருப்பதை நாம் அறியலாம். தேகம் சடப்பொருள்; ஆன்மா அறிவுப்பொருள். ஆன்மாவுக்கு கருவியாகவே தேகம் அமைந்துள்ளது. உயிர் அற்ற உடம்பு இயங்கும் தன்மையற்ற சடபொருள் என்பது எமது அனுபவம். மனம் எனப்படும் பொருளும் ஆன்மாவுக்கு உதவியாய் அமைந்த கருவியேயாம். ஆன்மா மனத்தின் மூலந்தான் உடம்பைத் தொழில் படுத்துகின்றது. இவை எப்படி நிகழ்கின்றதென்பது தனிப்பட்ட விரிந்த ஆராய்ச்சியாகும். இந்து சமய நூல்களும், தத்துவஞான நூல்களும், மனத்தைய சடத்தின் பரிணமம் என்றே கூறுகின்றன.

மனிதன் அறிவை எப்படி பெறுகின்றான் என்பதை ஆராய்வாம். அறிவைப் பெறும் மார்க்கங்கள் முக்கியமாக மூன்று. அவை, பிரத்தியட்சம் (நேர்முகமாக அறிதல்) அநுமானம் (பிறிதொன்றின் மூலம் அறிதல்), சுருதி (பெரியோர் வாக்கு) என்பனவாம். ஒருவன் தானே ஒரு பொருளை நேர்முகமாகத்தனது புலன்களால் கண்டறிதல் பிரத்தியட்சம். புகைகண்டவிடத்து அங்கு நெருப்பு இருக்வேண்டுமென அனுமானித்தல், அநுமானம ஒரு பொருளைக் கண்டவர்மூலம் அப்பொருளின் தன்மையைக் கேட்டறிதல் சுருதி எனப்படும். விஞ்ஞானத்தில் பிரதியட்சமும் அனுமானமும் பெருமளவிற்குப் பயன்படுத்தப் படுகின்றன. மின்சாரசக்தியை நேர்முகமாகக் கண்டவரில்லை. ஆனல் அதன் செயல்களில் இருந்து அப்படி ஒரு சக்தி இருக்கென்பதை விஞ்ஞானம் முடிந்த முடிபாகக் கொண்டுள்ளது. எல்லோரும் அந்தமுடிபை சந்தேகமின்றி ஏற்கின்றனர். சமயம் சுருதியையும் உள்ளுணர்வையுமே பிரதானமான வழிகளாகக் கொள்ளும்.

அறிவு நிகழ்வதற்கு இரண்டு உறுப்புகள் தேவை-அறிபவன், அறியப்படும் பொருள். அறியப்படும் பொருள் அறிபவனுக்குப் புறத்தேயுள்ளது. அறிவு அறிபவனதும் அறியப்படும் பொருளினதும் சம்பந்தத்தால் அறிபவனிடத்திலே ஏற்படுகின்ற அநுபவமாகும். அறிபவன், அறியப்படும் பொருள், அறிவு என்னும் மூன்றும் தொடர்புடையனவாக விளங்கும். சாதாரண அறிவு இவ்விதமே நிகழ்கின்றது. விஞ்ஞான அறிவும் இதன்பாற்பட்டதேயாம். அறிபவன் அறியப்படும் பொருளல்லவென்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். அறியப்படும் பொருளுக்குப் புறம்பாகவே அறிபவன் இருக்கின்றான். சடஉலகம் அறிபவனாகிய உயிர் அல்லது ஆன்மாவுக்குப் புறம்பாய் உள்ளது. விஞ்ஞான அறிவு சட உலகத்தைப்பற்றியதேயாகும். எவை ஆராய்ந்து அறியப்படுகின்றனவோ அவை அறிபவனுக்குப் புறத்தே உள்ளனவாம். உலகப் பொருள்கள் மாத்திரமின்றி அந்தக்காரணமாகிய மனமும் ஆராய்ந்து அறியப்படும் பொருளேயாம். மனத்தைப்பற்றிய ஆராய்ச்சியும் விஞ்ஞானத்தின்பாற்பட்டதேயாகும்.

வெளி உலகத்தில் காணப்படும் பொருள்களின் தன்மையையும் அவற்றின் அமைப்பு முறைகளையும். அவை இயங்கும் விதத்தையுமே விஞ்ஞானம் ஆராய்கின்றது. அறியப்படும் பொருள்களை விஞ்ஞானம் ஆராய்வதேயன்றி, அறிபவனாகிய ஆன்மாவை விஞ்ஞானம் ஆராய்வதில்லை. ஆன்மாவின் கருவியாக அமைந்துள்ள மனத்தை விஞ்ஞான முறையாக ஆராயலாம். ஆனல் அறிபவனை விஞ்ஞான முறையாக ஆராய்தல் முடியாத நிலை என்பது நாம் இதுகாறும் கூறியனவற்றால் பெறப்படும். எனவே, அறிபவனாகிய ஆன்மா ஒன்று உளவாயின் அதைப் பற்றி விஞ்ஞானம் ஒன்றும் கூறமுடியாதென்பது கருத்தூன்றிச் சிந்திக்கப்பாலதாம். ஆன்மாவென ஒன்று இல்லை எல்லாம் சடத்தின் விகாரமேயென்றும் கூறுபவர்கள் இம்முடிபை ஏற்காமல்விடலாம். இம் முடிபை விஞ்ஞானம் இன்னும் முடிந்தமுடிபாகக் கூறவில்லை. ஆன்மாவை விஞ்ஞானம் முற்றாய் மறுக்க முடியாத நிலையிற்றான் நிற்கின்றது.

ஆன்மாவைப் பற்றிய அறிவைப் பெறுவதற்குத் தான் சமயம் சாதனமாக அமைகின்றது. சடப் பொருளாகிய உலகத்தைப் பற்றி அறிய விரும்புவோர் விஞ்ஞானத்தைத் துணைக்கொள்வதுவே பொருத்தமாகும். ஆன்மாவைப் பற்றி அறிய விரும்புவோர் விஞ்ஞானத்தை நாடவேண்டிய அவசியமில்லை. ஆனல், ஆன்ம அறிவுக்கு விஞ்ஞானமும் பெருந்துணை புரியும். மனதத்துவ ஆராய்ச்சி விஞ்ஞானத்தின் ஒரு பிரிவாகவும் அமைந்துள்ளதென்பதை எவரும் மறுக்க முடியாது.

விஞ்ஞானம் சமயத்திற்கு மாறென்றும், சமயம் விஞ்ஞானத்துக்கு மாறென்றும் கூறுவது அர்த்தமற்ற கூற்றாகும். சமயம் விஞ்ஞானத்திற்கு இணங்கிச் செல்லவேண்டுமென்பது சமயத்தின் நோக்கத்தையும் விஞ்ஞானத்தின் நோக்கத்தையும் அறியாதார் கூற்றேயாம். சட உலக விஷயங்களில் விஞ்ஞான ஆராய்ச்சி கண்ட முடிபுகளைச் சமய வாதிகள் ஏற்கவே வேண்டும். சமய வாழ்வில் மனிதனுக்கு ஏற்படும் பேரின்ப அநுபூதி நிலைகளை விஞ்ஞானிகள் மறுப்பது உண்மை ஆராய்ச்சிக்கு மாறான மனப்பான்மையாகும். சமயத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் முரண்பாடு ஏற்படவேண்டியதில்லை. சமயம் வேறு விஞ்ஞானம் வேறு. சமயம் வேண்டாதார் விஞ்ஞான முடிபுகளுக்கமைய வாழலாம். சமயம் வேண்டியவர்கள் விஞ்ஞான முடிபுகளை இகழ வேணடியதில்லை. "சமய உண்மைகள் நியாயத்தின் பிரகாரம் விஞ்ஞான எல்லைக்கு அப்பாற்பட்ட அனுபவங்களாகும்," என்கிறார் டாக்டர் மகினேவிஸ்கி.

விஞ்ஞான ஆராய்ச்சியில் நாம் கவனிக்கவேண்டிய மிக முக்கிய உண்மை ஒன்றுளது. விஞ்ஞானம் ஒரு பொருளின் அமைப்பைப் பற்றியும் அது இயங்கும் ஒழுங்கைப் பற்றியும் கூறுமேயன்றி அப்பொருள் ஏன் அவ்விதம் அமைக்கப்பட்டிருக்கின்றது; அல்லது அது இயங்கும் நோக்கமென்ன என்பது பற்றியும் கூறுதென்பதாம் "விஞ்ஞானம் ஏன் என்னும் கேள்வியை எழுப்புவதில்லை. அது இவ்வுலகத்தின் தோற்றம், நிலை, இப்படி ஏன் இருக்கின்றதென்பதைப் பற்றியும், அதன் நோக்கம் என்ன என்பதைப் பற்றியும் ஆராய்வதில்லை" என்கிறார் சேர். ஆதர் தொம்சன் என்னும் விஞ்ஞானப் புலவர்.

விஞ்ஞானம் உண்மைச் சமய வாழ்க்கைக்கும், உண்மை அறிவு விருத்திக்கும் பல நன்மைகள் செய்துள்ளது. சமயத்தின் பெயரால் நாட்டில் மலிந்து கிடந்த குருட்டு நம்பிக்கைகளையும், உலகப் பொருள்களின் தோற்ற அமைப்புகளைப் பற்றியும் மக்களிடையே காணப்பட்ட பிழையான கட்டுக் கதைகளையும் ஒழித்துவிட்டது. எந்தக் கொள்கையையும் ஆராய்ந்து முடிபு காணும் மனப்பான்மையை மக்களிடையே வளர்த்து வருகின்றது. இவை யாவும் உண்மைச் சமய வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும் ஏதுக்களாகும்.

விஞ்ஞானம் சடத்தைப்பற்றி என்ன முடிபுக்கு வந்துள்ளது? என்பதை ஒரு சிறிது ஆராய்வோம். இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் சடம் அழிவற்ற நித்தியப் பொருளெனக் கருதப்பட்டது. ஆனல் இன்று சடமென ஒரு பொருளில்லை என்னும் முடிபுக்கு விஞ்ஞானிகள் வந்துள்ளனர்.

"இன்று ஒரு பௌதிக சாஸ்திரியிடம் மின்னணு அல்லது ஈதர் (Ether) என்பது என்னவென வினவின், அவர் அதை ஒரு பந்து அல்லது ஆடும் சக்கரம் என்றாவது அல்லது ஓர் உருவப் பொருளென்றாவது பகரமாட்டார். அவ்விதங் கூறாது அதற்குப் பதிலாக கணித சமன்பாட்டுச் சின்னங்களில் விடை அளிப்பார் என்கிறார், சேர். ஆதர் எடிங்ரன், F. R. S. "சடப்பொருள் என்பது உண்மையில் இல்லாத தொன்றை இருப்பதாகக் கூறுவதற்கு வசதியாக அமைந்த வாய்பாடாகும். நான் தத்துவ ஞானம் பேசவில்லை பௌதிக சாஸ்திரமே பேசுகின்றேன். சடப்பொருள் மறைந்துவ்ட்டதின் பயனாய் சட வாதம் ஒரு தத்துவ ஞானமுடிபாகநிலைக்க இடமில்லை" என்கிறார் உலகத்தில் சிறந்த தத்துவ ஞானியாக விழங்கும் பேற்ரம் றசல்.

இக்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளரின் கருத்துப்படி சடம் மன சங்கற்பத்தால் ஏற்படும் நிலையாகும் ஹென்றி பேக்சன் சடம் உயிர்த்தத்துவத்தின் (Elan Vital) பரிணமமே என்று பல நியாயங்கள் காட்டி வற்புறுத்தியுள்ளார். சி. ஈ. எம். ஜோட் என்னும் ஆங்கில தத்துவஞானி பிரபஞ்சத்தில் காணப்படும் செயல்களை சடவாத அடிப்படையில் விளக்கமுடியாது. ஆனதினல் பரிணாமத்திற்குக் காரணமாக ஒரு உயிர்ப்பொருளைக் கொள்ளுதல் அவசியமாகின்றதெனத் தமது "மனமும் சடமும்" என்னும் நூலில் கூறியுள்ளார்.

கண்ணுக்குப் புலனகும் சடம் அணுக்களின் கூட்டம். அணுக்கள் மின் அணுவின் கூட்டம் மின் அணு கடபுலனகாச் சக்தியின் அம்சம். எனவே, சட உலகம் இக்காலப் பௌதிக ஆராய்ச்சியில் சக்தி மயமாக மாறிவிட்டது. சேர் ஆதர் எடிங்ரன் என்பவரது கூற்றின்படி சக்தியும் மனத்தினல் கற்பிக்கப்படும் கணிதவாய்ப்பாட்டின் சின்னமாகும். எனவே சட உலகம் விஞ்ஞான ஆராய்ச்சியில் மனோசங்கற்பப்

(4-ம் பக்கம் பார்க்க)

**கலைப்புலவர் நினைவுதினம்**

கலைப்புலவர் திரு. நவரத்தினம் அவர்கள் இறைவனடி சேர்ந்து இன்று ஓராண்டு நிறைவடைகிறது.

அன்னரின் நினைவாக சில விசேஷ கட்டுரைகள் இங்கு வெளியிடப்படுகின்றன.

# வர்த்தகத்துறைக் கல்விக்கு வழிகாட்டி

— ச. அம்பிகைபாகன், அதிபர், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம் —

கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் நுண்கலை ஆராய்ச்சியிலும், தத்துவ ஆராய்ச்சியிலும் தலைசிறந்து விளங்கியபோதிலும், அவர் ஆசிரியராகப் போதித்த கல்வி வர்த்தகத்துறைக் கல்வியாகும். இவ்வுண்மையை அநேகர் அறிந்திலர். அறிந்தவர்களும் தத்துவ ஆராய்ச்சியிலும் நுண்கலையிலும் ஈடுபட்டவர் எப்படி வர்த்தகத்துறை ஆசிரியராக விருந்தனரென்று ஆச்சரியமடைந்ததை நான் அறிவேன்.

கலைப்புலவர் அவர்கள் தமது கல்லூரிப்படிப்பை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் முடித்துக்கொண்டு கொழும்புக்குச் சென்றனர். அங்கு லோறி முத்துக்கிருஷ்ண என்பவரால் நடாத்தப்பட்ட தாபனத்தைச் சேர்ந்து (Poly-Technic) சுருக்கெழுத்து, கணக்கு பதிவுசாத்திரம், வர்த்தகக் கலை முதலியவற்றைப் படித்து கடைசியில் லண்டன் எவ். சி. ஐ. (F. C. I) என்னும் பட்டத்தைப் பெற்ருர்.

கொழும்பில் தமது படிப்பை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணத்திற்குத் திரும்பினர். அப்பொழுது பெரியதெருவில் இக்னேஷஸ் என்பவர் சுருக்கெழுத்து முதலியவற்றைப் போதிப்பதற்கு ஒரு தாபனத்தை நடத்திவந்தார். அதில் சிலகாலம் கலைப்புலவர் ஆசிரியராகவிருந்தார். அந்தக்காலத்தில் பாடசாலைகளிலோ அல்லது கல்லூரிகளிலோ வர்த்தகத்துறைப் பாடங்கள் போதிக்கப்படவில்லை.

முதன்முதலாக வர்த்தகத்துறைக் கல்வியை பாடசாலைகளில் படிப்பிக்கத்தொடங்கிய பெருமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியையே சாரும். வணக்கத்துக்குரிய பி. ரி. காஷ் என்பவர் அதிபராக வந்ததும் அங்கு பல புதிய துறைகள் ஏற்படுத்தினர். விஞ்ஞானம், பூமிசாத்திரம் முதலியவற்றைச் செவ்வனே படிப்பிப்பதற்கு ஆய்வுகூடங்களை ஏற்படுத்தினர். வர்த்தகத்துறைக் கல்வியைப் புதிதாக ஆரம்பித்தனர். இக்கல்வியைப் போதிப்பதற்கு அந்தக் கல்லூரிப் பழைய மாணவரான கலைப்புலவர் அவர்களையே நியமித்தனர்.

அந்தக்காலத்தில் வர்த்தகத்துறைக் கல்வியை விரும்பிய மாணவர்கள் மிகச்சிலரே. அந்தச் சிலரும் வயதிற் கூடியவர்களாயும், ஆற்றல் குறைந்தவர்களாயும் காணப்பட்டனர். இவர்களை வழிநடத்துவதென்ருல் மிகவும் கஷ்டமான காரியம். ஆனல் கலைப்புலவர் அவர்கள் தமது சீலத்தினலும் மாணவர்மீது காட்டிய அன்பினலும் அவர்களை வசீகரித்து தமது கடமையைத் திறம்பட நடாத்திவந்தார். அவர்களிடம் படித்தவர்களிற் பலர் நன்னிலையில் இருக்கின்றனர். யாழ்ப்பாணத்தில் இப்பொழுது வர்த்தகத்துறைக் கல்வியைப் போதிப்பவர்களிற் பலர் அவர்களுடைய மாணவராவர். கலைப்புலவர் அவர்கள் தமது ஆசிரியத்தொழிலை எவ்வாறு நடாத்தினர் என்பதை அவருடன் ஆசிரியராகவிருந்த ஒருவர் பின்வருமாறு கூறியுள்ளார்: "அவர் ஆசிரியராக இருந்தகாலத்தில் எல்லோராலும் புறக்கணிக்கப்பட்ட வர்த்தக பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியராக யாழ் மத்திய கல்லூரியில் கடமையாற்றி வந்தார். அந்தக்காலத்திலே மேற்படிப்புக்கு உதவாத மாணவர்களையே வர்த்தகபாடப் படிப்புக்கு கூட்டிவிடுவார்கள். ஆனல் புறக்கணித்த மாணவர்கள் இவரின் வகுப்பில் படித்துவரும் காலத்தில் இவரைக் குருவாக வணங்கி, இவரின் சாதனையையும் போதனையையும் கவனித்துத் தங்களை அறியாமலேயே தங்கள் சீவியம் நல்வழியில் மாறுவதை அறிந்து அவர்கள் பொறுப்புள்ள மாணவர்களாக மாறி சோதனைகளில் சித்திபெற்று எல்லோராலும் கணிக்கப்படும் பெரும் உத்தியோகத்திலும் பதவியிலும் தேறிவந்திருக்கிருர்கள்."

இவர்கள் விரும்பியிருந்தால் வருமானவரி ஆலோசகராகவும் கணக்குப்பரிசோதகராகவும் பெரும் பணம் சம்பாதித்திருக்கலாம். ஆனல் இவருக்கு இத்துறையில் மனம் போகவில்லை.

கணக்குப் பதிவுபற்றியும், வாணிபமுறைபற்றியும் சில நூல்களை கலைப்புலவர் அவர்கள் எழுதியுள்ளார்கள். தமிழ்மொழியில் முதல்முதலாக வர்த்தகபாடநூலை வெளியிட்ட பெருமை கலைப்புலவர் அவர்களுக்கே உரியது. "இக்கால வாணிப முறை" என்னும் நூலை எழுதுவதற்கு அவர்கள் எடுத்த பிரயாசையைநான் அறிவேன். உடல் நலம் குன்றியிருப்பதையும் பொருட்படுத்தாது, அந்நூலுக்கு வேண்டிய விஷயங்களைத் தேடுவதற்கும் தமிழில் அவற்றை எழுதுவதற்கும் இரவும் பகலும் உழைத்தார். நாங்கள் பலமுறை ஓய்வெடுக்கும்படி கூறியும் அந்த நூலை எழுதி முடித்தபின்புதான் தமக்கு மனநிம்மதி ஏற்படும் என்று கூறினர். கலைப்புலவர் அவர்கள் இத்துறையில் எழுதிய நூல்கள் அவர்களுக்கு இத்துறையில் இருந்த ஆற்றலை வெளிபடுத்துவதோடு, தமிழில் புதுநூல்கள் வெளிவருதற்கு வழிகாட்டிகளாகவும் விளங்குகின்றன.

கலைக்கதிர் என்னும் பத்திரிகை இவர்களின் "இக்கால வாணிப முறை" என்னும் நூலைப்பற்றி எழுதிய மதிப்புரையில் ஓர் பகுதியை எடுத்துக்காட்டி இக்கட்டுரையை முடிப்போம். "அவருடைய அரிய முயற்சி பெரிதும் பாராட்டற்பாலது. இந் நூலின் வாயிலாக அவர் தமிழ் அன்னைக்கு அரிய தொண்டினைச் செய்துள்ளார். இந் நூலினை வாசிப்போர் வாணிபத்துறையைப் பற்றி அடிப்படைக் கருத்துக்களைதெள்ளிதில்உணரலாம்."

# யாழ். நூல் நிலையத்தில் கலைப்புலவர் பகுதி

(வண. தனிநாயக அடிகளார்)

**மலாயா, கோலாலம்பூரில் உள்ள மலாயா பல்கலைக்கழகத்தில் இந்தியத்துறைப் பேராசிரியராக வண. சேவியர் எஸ். தனிநாயக அடிகளார் பணியாற்றுகிருர். இந்தியத் துறையில் 130 மாணவர்கள் கல்வி பெறுகின்றனர். தமிழ்ச் சிறப்பு வகுப்பு, சமஸ்கிருதம், இந்தியப்பண்பாடு இன்னேரன்ன துறைகளில் பயிற்சியளிக்கப்படுகின்றது. ஒரு பேராசிரியரையும் ஏழு விரிவுரையாளர்களையும் கொண்ட இத்துறையில் இலங்கைப் பல்கலைக்கழக முன்னுள் வரலாற்று விரிவுரையாளர் டாக்டர் சின்னப்பா அரசரத்தினம் வரலாற்று விரிவுரையாளராகப் பணியாற்றுகிருர்.**

மலேயாப் பல்கலைக் கழகம் பதிப்பிக்க இருக்கும் தமிழ்க் கலைகளைப் பற்றிய நூல் அடைவிற்கு (Bibiliography) வேண்டிய சில செய்திகளைத் தேடுவதற்குக் காலஞ்சென்ற கலைப் புலவர் நவரத்தினம் அவர்களின் நூற் கூடத்தைப் பார்க்கச் சென்றேன். அங்கு அவர்கள் பல ஆண்டுகளாகச் சேர்த்துவைத்த நூல்களைப் பார்த்தேன். அவற்றின் பட்டியல், சமய இலக்கியம், இந்துசமய தத்துவம், இந்தியக் கலைகள், தமிழ்க் கலைகள், ஈழநாட்டின் வரலாறு இத்தகைய பல துறைகளில் சிறந்த நூல்கள் எல்லாவற்றையும் கொண்டது. வேறு நூல்நிலையங்களில் நான் இதுகாறும் காணுத சில நூல்களைப் பார்த்து அவற்றின் நூல் அடைவுக் குறிப்புகளைக் குறித்துள்ளேன். திருவாளர் நவரத்தினம் அவர்களின் நூற் கூடத்தைப் பார்வையிட்டது பற்றி எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவர்களுடைய நூல்கள் சூழத் திருவாளர் நவரத்தினத்தின் நண்பர்களுடன் இந்நூற் கூடம் எவ்வாறு பயன்படக் கூடுமெனத் கலந்துரையாடினேன். இந்நூற்கூடத்தைப் பிறநாடுகளில் விலைக்குப் பெறுவதற்குப் பெரிதும் விரும்புவர். ஆனல் இந்நூற்கூடம் இலங்கையில் இருப்பதே பொருத்தமாகும். தமிழ் மக்களுக்கெனச் சிறப்பான பல்கலைக் கழகம் இன்று இல்லாத நிலையில் இந் நூல்களை யாழ்ப்பாண நகராண்மைக் கழகத்தின் நூல் நிலையத்தில் திருவாளர் நவரத்தினத்தின் நினைவால் ஒரு சிறப்புப் பகுதியாக அமைத்தால் ஈழத்தின் தமிழ் மக்கள் அனைவரும் அதன் பயனைப் பெறுதல் கூடும். கலைப் புலவரின் புகழும், பெயரும் அவருடைய சொந்த நகரில் என்றும் நிலைநிற்கும்.



வண. தனிநாயக அடிகளார்

## 'பாலையும் பணிசையும் மறுப்பதேன்?'

—ஆர். ஜி.

பொல்காவலை, புதன்

'இவ்வளவு காலமும், அமெரிக்காவிடமிருந்து இலவச பாலையும் பணிசையும் ஏற்று வந்த இலங்கை அரசாங்கம், அவற்றை இப்பொழுது ஏற்பதால் தகுதி குறைந்துவிடுமெனக் கருதுகிறது' என்று ஹங்கவ என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தம்பதெனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், மலைநாட்டில் வசிக்கும் பத்து லட்சம் "கள்ளத் தோணி"களுக்கு இந்த அரசாங்கம் வேலை வசதியளிக்கிறதென்றும், இந்தச் செயலை, இந்த அரசாங்கம் தனது தகுதிக்குக் குறைந்ததென்று கருதவில்லையா என்றும் கூறினர்.

இந்த நாட்டில் வாழும் பெரும்பான்மை சமூகத்தினரான சிங்கள மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்காது, 'கள்ளத்தோணி'களுக்கு இந்த அரசாங்கம் வேலை வசதியளித்திருக்கிறது என்றும் இவர்களுக்கு பிரஜாவுரிமை கொடுப்பது வெட்கக்கேடான செயலென்றும் அவர் கூறினர்.

## திருமலைச் செய்திகள்

### பயிற்சிவகுப்பு

"கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியில் நாட்டின் வளர்ச்சி தங்கியுள்ளது. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி குநாணயமும் நேர்மையும் உள்ள ஊழியர்கள் தேவை. இந்தத் தேவையை இவ்வகுப்பு பூர்த்தி செய்யுமென நம்பலாம்" என்று திருமலை கூட்டுறவு உத்தியோகத்தர் திரு. காசிப்பிள்ளை சோலையடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் கூட்டுறவு பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

⁂ ⁂ ⁂

### உப-தலைவர் தெரிவு

கிண்ணியா கிராமசபையின் உபதலைவராக இரண்டாம் வட்டார உறுப்பினர் ஜனுப் ரீ. ஆமாத் தெரிவு செய்யப்பட்டார். சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் ஜனுப் ஆர். எல். ஏ. சமது தலைமையில் நடைபெற்ற போது மேற்படி தெரிவு நடைபெற்றது.

⁂ ⁂ ⁂

### வரவேற்பு

அண்மையில் அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்பியனுக தெரிவு செய்யப்பட்டு சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்ட திருமலை "ஒலிம்பிக்ஸ் குழு" வீரர்களை கௌரவிக்க இங்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்குழு கொழும்பு யங்ஸ்ரஸ் குழுவைத் தோற்கடித்தது.

⁂ ⁂ ⁂

### இடமாற்றமில்லை

திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டி. எம். ஏ. ஸ்பெல் வின்டின் பதுளை இடமாற்றம் திடீரென இரத்தாகியது. தொடர்ந்து அவர் திருக்கோணமலை அரசாங்க அதிபராகவே கடமையாற்றுவார். இவரின் இடமாற்றத்தை ஆட்சேபித்து பல சங்கங்களும் கிராமசபைகளும் சமாஜங்களும் எதிர்ப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

⁂ ⁂ ⁂

### அலுவலாளர்கள்

திருக்கோணமலை ஸ்ரீ மகா விஷ்ணு ஆலய புனருத்தார கும்பாபிஷேகத் திருப்பணிச் சபை அலுவலாளர்கள் வருமாறு:

பாதுகாவலர்கள்: வழக்கறிஞர் திரு. பொ. இரங்கநாதன், திரு. வி. பூபாலபிள்ளை, திரு. சொ. சண்முகசுந்தரம். தலைவர்: செல்வி பகு. யோகீஸ்வரக்குரு. உபதலைவர்: திரு. வே. ச. நாகப்பச்செட்டியார். இணைச் செயலாளர்கள்: திரு. மா. பாலசுந்தரம், திரு. வெ. கோவிந்தசாமி. பொருளாளர்: திரு. இ. சஞ்சிக்கண்ணு.

## யோசனை கைவிடப்பட்டது

திருவனந்தபுரம், மார்ச் 13

கேரளத்தில் 6, 7-ம் வகுப்பு மாணவர்களிடம் கட்டணம் வசூலிப்பதென்ற யோசனையைக் கைவிட்டுவிட்டதாக கேரள முதன் மந்திரியும் நிதி மந்திரியுமான திரு. சங்கர் தெரிவித்தார்.

## பசியிலிருந்து விடுதலை வாரம்

கொழும்பு, புதன்

இம் மாதம் 21-ந் திகதி தொடக்கம் 28-ந் திகதிவரையும் விவசாய, நீர்ப்பாசன அமைச்சு பசியிலிருந்து விடுதலை வாரமாகக் கொண்டாட முடிவு செய்துள்ளது. அவ்வியக்கத்தின்போது உணவு உற்பத்திபற்றி ஆராயும்பொருட்டு கிராமங்களில் விசேட கூட்டங்கள் நடத்துமாறு அமைச்சு கேட்டுள்ளது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள உணவு உற்பத்தி உத்தியோகத்தர்களை இவ்வாரத்தில் விதை விதைப்பது போன்றவற்றை கிராமம்தோறும் பெருமளவில் நடத்துமாறு கேட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களை 28-ந் திகதி, அவர்கள் செய்துமுடிக்காத எல்லா வேலைகளையும் செய்யவேண்டும் என்றும், மற்றும் வேலை செய்யும் இடங்களைச் சுத்தம் செய்வதுபோன்ற சிரமதான வேலைகளில் ஈடுபடவேண்டுமென்றும் அமைச்சு கேட்டுள்ளது. கச்சேரி தேசிய சேவை மூலம் பசியிலிருந்து விடுதலை பெறுவதற்கான நிதி ஒன்றையும் நடத்துமாறும் அரசாங்க ஊழியர்களை மந்திரி சி. பி. டி' சில்வா கேட்டுள்ளார். பசியிலிருந்து விடுதலை வாரத்தில் ஊழியர்கள் ஒவ்வொருவரும் 25 சதத்திற்கான சேமிப்பு முத்திரையை வாங்கி இந்த நிதிக்கு உதவவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

## கூட்டுறவு சங்க சேவைபற்றி எம். பி.

திருமலை, புதன்

"கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் ஏழைகிராம மக்கள் பயனடையமுடியும். நாட்டிலோ இன, மத ஒற்றுமை நிலவுவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் பாடுபட வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் ஏழை மக்களுக்கு பயன்படக்கூடிய முறையில் நடத்தப்படவேண்டும்."

கிண்ணியா பலநோக்குச் சங்க சமாஜ ஆண்டு விழாவில் மூதூர் இரண்டாவது எம் பி. திரு. ஏ. எல். ஏ. மஜீத் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். சமாஜ ஆண்டுவிழா கிண்ணியா அரசினர் தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்றது. விழாவிற்கு திருக்கோணமலை மாவட்ட கூட்டுறவுச் அபிவிருத்தி ஆணையாளர் திரு. எஸ். ஆர். ஆசீர்வாதம் தலைமை தாங்கினர். திருமலைக் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. பி. கோவிந்தசாமி சமூகமளித்திருந்தார்.

## பிரயாணிகள் சம்மேளனம் ஆட்சேபம்

கொழும்பு, புதன்

ஐ. ஆர். சிகளுக்கு மோட்டார் வாகனங்களைச் செலுத்துவதற்கான அனுமதி லைசென்ஸ் வழங்குவதையிட்டு அகில இலங்கை பொதுப் போக்குவரத்துப் பிரயாணிகள் சம்மேளனம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. தமது ஆட்சேபத்தை சம்மேளனம் தொழில் தேசியமய சேவைகள் மந்திரி திரு. எம். பீ. டி. சட். சிறிவர்த்தனவிற்கு அனுப்பி வைத்துள்ளனர். முன்னர் செய்த குற்றத்திற்காக ஐ. ஆர். சிகளை இருமுறை தண்டிப்பதை தாம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், வாடகைக் கார் செலுத்துவதற்கு வழிசெய்யும் பொருட்டு மோட்டார் வாகன லைசென்ஸ் வழங்குவது ஆபத்தானது என சம்மேளனம் தனது மகஜரில் தெரிவித்துள்ளது.

திருத்தப்பட்ட மோட்டார் போக்குவரத்து மசோதாவின் பிரகாரம் மோட்டார் வாகனங்களைச் செலுத்த தகுதியுடைய ஐ. ஆர். சிகளுக்கு அதற்கான அதிகாரிகள் லைசென்ஸ் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கலைப்புலவர் நவரத்தினம்

— கோவை கிழார் ஸ்ரீ ம. இராமச்சந்திரன் செட்டியார் B. A., B. L. —
(முன்னாள் அறநிலையப் பாதுகாவலர்)

நாட்டுப்புறத்து ஓட்டு வில்லை வீடு. அதில் வெளிப்பகட்டு சிறிதுமில்லை. அதற்குள் குடியிருப்பது சாதாரண நடுத்தரக் குடும்பம். அதனை விளம்பரப்படுத்தும் சின்னம் யாதொன்றுமில்லை. எந்தப் புற்றில் எந்தப் பாம்போ என்னும் பழமொழிப்படி இந்த எளிய குடிலில் உயர்ந்த கல்விக் களஞ்சியம் இருக்கும் என்று யாரே நினைத்தார்? உண்மையில் அதில் அசையும் களஞ்சியம், அசையாக் களஞ்சியம் இரண்டும் இருக்கின்றன. உயர்ந்த நற்குடியில் தோன்றிய பெருந்தகையாரும் கலைமகள் போன்றயாள் வல்லுனர்ஆன அவரது இல்லக்கிழத்தியாரும் அசையும் களஞ்சியங்கள். சிற்பம், ஓவியம், இன்னிசைக் கருவிகள், தெய்வத் திருவடிவங்கள், வியக்கத்தக்க அறிவு நூல்கள், அசையாக் களஞ்சியங்கள். இச் செவ்விய களஞ்சியங்களை தன்னுள் படைத்துக் காத்துவரும் இல்லமோ எத்துணை சிறிதாகவும், அடக்கஒடுக்கம் கொண்டதாகவும், பண்டை நிலை படைத்ததாகவும், எத்துணை அழுக்காறு கொண்டகள்ளனாலும் வெறுத்துத் தள்ளிவிடககூடிய தற்பெருமையற்றதாகவும் தோற்றமளிக்கிறதென்றால் அதனைப் படைத்து அது இருக்கும் ஒழுங்கைக்கே (சந்து) தன் பெயரை அளித்த பெருமகனாரின் வீடு என்றால் அது வியப்பைத் தருமல்லவா?

ஈழநாட்டு யாழ்ப்பாணப் பேரூரில் தம்பிப்பிள்ளை ஒழுங்கையில் முதல் இலக்கம் படைத்த அந்தப் பழைய இல்லத்தை அடைந்து உள்ளே சென்று பார்ப்போம். பண்டை மரவேலை கொண்ட பெருங் கதவைத் திறந்து உள்ளே சென்றதும் ஒரு சிறு தாழ்வாரமும் முற்றமும் காண்போம். குறுகிய முற்றத்தில் சின்னஞ்சிறு பூச்செடிகள் ஒழுங்காக வளர்ந்திருக்கின்றன. இடது புறத்தில் ஒரு கதவும் ஒரு சிறு அறையும் காண்போம். அவ்வறையில் அரிய தமிழ் நூல்களும் சிற்ப நூல்களும் உள்ளன. ஒரு சிறு நாற்காலியும் மஞ்சமும் உள்ளன. இவ்வறையே கலைப்புலவரின் படிப்பறையும், எழுதறையும் ஆகும். இருபதாம் நூற்றாண்டில் நாகரிகம் மிகுந்த நாளில் இந்த அறை மிகத் தெளிந்தஆராய்ச்சி நூல்களை அருளியதென்றால் எவரே நம்புவார்? பூச்செடிகள் கொண்ட சின்னஞ்சிறு முற்றத்தை தாண்டினால் எதிரே ஒரு தொட்டிக்கட்டு மனையைக் காண்போம். நான்கு தாழ்வாரங்களும் நடுவில் ஒரு சிறு முற்றமும் உண்டு. முற்றத்தின் மேலிருந்து தான் கதிரவன் ஒளி அவ்வில்லத்திற்கு வரும். வேறு சாளரங்கள் இல்லை. இந்தத் தொட்டிக் கட்டின் நாற்புறத்துத் கொட்டங்களிலும் அசையாக் களஞ்சியங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றிலும் சிறப்பாகக் காட்சியளிப்பது பெரியதொரு ஆடவல்லான் (நடராசன்) திருவுருவம். சிற்பக் கலையில் சிறந்த இத்திருவுருவம் நமது ஐம்பொறிகளையும் கவரக் கூடிய நிலையில் காட்சி தருகிறது. மேலும் பல தெய்வ ஓவியங்களும் சிற்பங்களும் உள்ளன. எதிர்வாடையில் பெரிய யாழ்கள் அழகு பெற பெற வைக்கப்பட்டுள்ளன. சிற்பங்களும் ஓவியங்களும் நூல்களும கலைப்புலவரின் களஞ்சியங்கள். யாழ் முதலிய இன்னிசைக் கருவிகள் அவரது வீட்டரசியாரின் களஞ்சியங்கள். இவ்வரிய கூடத்திற்கு வலது புறத்தில் ஒரு சிறிய வெளியிடமும் அதில் சில தாவரங்களும் கிணறும் உள்ளன. இவைகள் குடும்ப வாழ்க்கைககு வேண்டிய முறையில் அமைந்திருக்கின்றன. இவ் வீட்டில் நுழைந்ததும் இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருவரும் காட்டும் வரவேற்பின் அன்பு நிலை களஞ்சியங்களின் பெருமையைத் தாழத்தி விடுகின்றது.

இல்லறத்தின் சிறந்த பண்பு விருந்தோம்பல் ஆகும். அதன் உயரிய நிலை நவரத்தினம் தம்பதிகளிடையே ஓங்கி வளர்ந்திருக்கிறது. வேறு எந்த இல்லத்திலும் காணு அன்பு இவர்களிடை காண்போம். பண்டை நாயன்மார்கள் காட்டியதாகத் திருத்தொண்டர்புராணம் கூறும் நன்முறைகள் தற்காலத்தில் இந்த இல்லத்தில் காண்போம். யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள் உண்ணும் உணவுக்கும் நம் தென்னாட்டுத் தமிழர் உண்ணும் உணவுக்கும் சிறிது வேறுபாடு உண்டு. இரவில் இடியப்பமும் சொதியுமே வெகுவாக இருக்கும். சில கிழங்குப் பண்டங்கள் நீல நிறத்தோடு படைக்கப்பட்டு இருக்கும். இவைகள் உடலுக்கு உறுதி பயப்பன. உணவைக்காட்டிலும் அவர்கள் ஓம்பும் அன்பேஎந்த உணவையும் சீரணிக்கச்செய்து ஒன்றுக்குப் பன்மடங்கு உட்கொள்ளச் செய்துவிடும். இப்படிப்பட்ட மனையாட்சிகொண்ட மனையாளர்கள் விருந்தினர்களை வரவேற்கும் முறைகளைத் தென்னாட்டார் பழகிக்கொண்டால் அவற்றின் நன்மைகளைக் கூறவியலாது.

# கலைப்புலவரின் திருப்பணி

— ஓர் அன்பன் —

யாழ்ப்பாணம் சைவசமயத்திற்கு நிலைக்களமாக விளங்கியபோதும் ஆங்குள்ள சீதாரியிலும் (கோட்டைப்பாக்கம்) அதற்கணித்தாயுள்ள பகுதிகளிலும் சைவசமயப்பணிக்கும் வழிபாட்டிற்கும் வசதியின்மையை அறிந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிலுல உயர்தர மாணவனாய் இருந்தகாலத்தில் திரு. க. நவரத்தினம் அவர்கள் அப்பகுதி மக்களின் கவலையை நீக்குவதற்கு இந்து வாலிப சங்கம் ஒன்றை நிறுவி தமது நண்பர்களின் ஒத்துழைப்புடனும் அப்பகுதியிலுள்ள சைவப்பெரியார் திரு. எஸ். பொன்னுச்சாமி அவர்களின் உதவியுடனும் செயலாற்றினார். பின்னர் பல இன்னல்களினாலும் சைவப்பெரியார் திரு. பொன்னுச்சாமி அவர்களின் மறைவினாலும் இந்து வாலிபர் சங்கம் தொடர்ந்து இயங்கவில்லை. இதனால் கவலையுற்றிருந்த திரு. க. நவரத்தினம் அவர்களுக்கு 1954-ம் ஆண்டு அரிய சந்தர்ப்பம் கிடைத்து மகிழ்ச்சி அடைந்தார். அப்பகுதியிலுள்ள நண்பர்களின் வேண்டுகோளின்படி சுவாமி ஸ்ரீமத் பிரேமாத்மானந்தா அவர்களின் தலைமையில் அவ்வாண்டு மேமாதம் இந்து சன்மார்க்க சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்யத் துணைபுரிந்தார். இச்சங்கத்தின் ஆதரவில் வெள்ளிக்கிழமைகளில் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. பிரார்த்தனைக் கூட்டங்களில் சில சைவப் பெரியார்கள் சமயபோதனை செய்வதுண்டு. இச்சங்கத்திற்கு நிரந்தரமான கட்டடம் இல்லை. தற்காலிகமாக திரு. க. சதாசிவம் அவர்களின் இல்லம் சங்கத்தின் காரியாலயமாக விளங்குகின்றது. சங்கத்தின் தலைவராக அத்துவக்காத்து சு. இ. கனகநாயகமும், செயலாளராக திரு. சதாசிவமும் கடமையாற்றி வருகின்றார்கள்.

1955-ம் ஆண்டு கிளிநொச்சிப் பகுதியிலுள்ளவர்களின் அழைப்பின் பொருட்டும் முன்னைநாள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களின் வேண்டுகோளின் பொருட்டும் உருத்திரபுரத்தில் அழிந்து கிடந்த சிவாலயத்தைப் பார்ப்பதற்காகத் திரு. க. நவரத்தினம் அவர்கள் தமது நண்பர்களுடனும் இந்துசன்மார்க்க சங்க நிர்வாகிகள் சிலருடனும் சென்று பார்த்து அச்சிவாலயத்தை புனருத்தாரணம்செய்ய உடனே நடவடிக்கை எடுத்தார். இச்சிவாலயத்திருப்பணியை நிறைவேற்றுவதற்காகக் கொழும்புத்துறைச் சுவாமியாரின் ஆசீர்வாதத்தைப் பெற்று தமது நண்பர்களுடன் பலபெரியார்களைச் சந்தித்துத் திருப்பணி வேலைக்கு வேண்டிய நடவடிக்கை எடுத்தார். சிவாலயத்தைக் கட்டுவதற்காகமோட்டார்வர்த்தகரும் சைவப் பெரியாருமாகிய திரு. இ. செல்லையா அவர்கள் முன்வந்து திருப்பணியை நிறைவேற்றினர். அம்பாள் ஆலயத்தைச் சைவப் பெரியார் சிருப்பர் திரு. சு. கனகசபையவர்கள் கட்டி முடித்தார். மகாமண்டபத் திருப்பணியை மற்றும் பல பெரியார்களின் உதவியுடனும் எங்கள் சமூகத்தின் பெரிய கொடைவள்ளலாகிய வரும் முதிர்ந்த வயதுடையவருமாகிய டாக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்களினால் அளிக்கப்பட்ட நிதியுடனும் ஆரம்பித்து வைத்தார். திரு. க. நவரத்தினம் அவர்கள் சமூகத்திற்கும், சமயத்திற்கும், கலைக்கும் செய்த தொண்டிற்காக 'கலைப்புலவர்' எனக் கௌரவிக்கப்பட்டார். அவர் செய்த பணியைத் தொடர்ந்து செய்வதற்கு ஒருவரைக் காணுதல் அரிது. அவரின் மறைவு அவரது மனைவி, உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு மாத்திரமின்றி தமிழ்ச் சமூகத்திற்கே ஈடில்லாத நஷ்டம். கலைப்புலவர் மறைந்தார். அவரது நினைவு என்றும் மறையாது.

---

## வருடாந்தப் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப்போட்டி இம்மாதம் கழகத்தின் மைதானத்தில் நடைபெற ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இவ்விழாவில் தொழிலாளர்களுக்கும், மாணவர்களுக்குமிடையில் ஓர் மென்பந்தாட்டப் போட்டி நடைபெறும்.

இப்போட்டியில் கடந்த பல வருடங்களாக மாணவர்களே பெருத்த வெற்றியீட்டி வந்துள்ளார்கள். ஆனால் இவ்வருடம் நடைபெறும் இப்போட்டியில் தொழிலாளர்கள் வெற்றிபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது. மாணவர்கள் கோஷ்டிக்கு செல்வன் அன்ரனியும், தொழிலாளர்கள் கோஷ்டிக்கு செல்வன் வின்சனும் தலைமைதாங்குவார்கள்.

---

கலைபுப்லவர் க. நவரத்தினம் அவர்கள் வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமானில் ஈடுபாடுடையவர். முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் அப்பெருமான் மீது அவர் பாடிய நாமாவளி ஒன்று இங்கே தரப்படுகின்றது.

தன்னையறிந்தின்பமுறு யோகமெய்திட-இத்
தாரணியிலுண்மை வழி ராமநாமமே.

பாசபந்தம் விட்டகன்று பாரிலுய்ந்திட-ஒரு
பாதை வேண்டில் உண்மை கேளும்
ராமநாமமே.

நித்தியமும் உத்தமனுய்நின்றிலங்கிட-தினம்
சத்தியமாய் பக்தி செய்யும் ராமநாமமே

பஞ்சப்புலன் வேதனையிற் பட்டழிந்திடும்-
சர்வ
பாவிகட்கும் ஏற்ற வழி ராமநாமமே

தத்துவங் கட்கப்பாலாம் ஞானபூமியில்-
பல
சித்தர்களும் கண்டருந்து ராமநாமமே

ஆதியந்தமானவொரு சோதிமயமே-தினம்
ஓதிடுவார் பேறு பெற ராமநாமமே

வீடுபெற நாட்டமுறு பக்தர்கட்கு-நல்ல
ஓடமிது சத்தியங்காண் ராமநாமமே

மேதினியிலன்புடனே எந்த நாளும்-நற்
கீதமிதை ஓதிடுங்கள் ராமநாமமே

இவ்வுலகில் வேறு கதியில்லையில்லையே-
ஞான
இன்பம்பெற மார்க்கமிது ராமநாமமே

நித்தியனை நிர்க்குணனை நீல மாலையே-சதா
நிஷ்டைபண்ணிஉய்ந்திடுங்கள் ராமநாமமே

வண்ணை நகர் தன்னிலுறை வேங்கிடே
சனைத்தினம்
எண்ணிவாழ இன்பளிக்கும் ராமநாமமே.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

வியாழன் 14-3-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 குறள்வாசகம், 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக் கோஷ்டி.

இரவு 7-00 வி. வீரசிங்கம்—பேச்சு, 7-15 நேயர்விருப்பம், 7-45 'மனோரஞ்சிதம்'—தொடர் நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம், 9-30 குரல்வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-35 கல்யாண சோழபுரம்எஸ். துரைஸ்வாமி-பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கும்பகோணம் யு. ஆர். சந்திரா—பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 கல்யாணசோழபுரம் எஸ். துரைஸ்வாமி—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல், 7-35 சுவாமி சித்பவானந்தா—பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி, சந்தியாவந்தனம் ஸ்ரீநிவாசராவ்—பாட்டு, 8-40 திரைப்பட இசை, 9-15 வீரபாரதம் — இசைச்சித்திரம், 9-30 அகிலபாரத இசை நாடகம்.

## அரசாங்க அதிபர்கள் கூடுகின்றனர்

கொழும்பு, செவ்வாய்

கிராமசேவகர்கள்சேவையை மீண்டும் பரிசீலனைசெய்வதற்கு அரசாங்க அதிபர்கள் இம்மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் உள்நாட்டமைச்சில் கூடுகின்றனர்.

கிராமசேவர்களாகத்தெரிவு செய்யப்பட்டவர்களில் 365 பேர் வேலைக்கு வராததைத் தொடர்ந்து அந்த 365 ஸ்தானங்களும் காலியாகவே இருக்கின்றன. இந்த காலி ஸ்தானங்களை நிரப்புவது பொதுச் சேவைக் கமிஷனின் கடமையென உள்நாட்டமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கிராமசேவகர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது ஒருசில புள்ளிகள் குறைய எடுத்ததனல் தேர்ச்சியடையாத பரீட்சார்த்திகள் காலியாகஉள்ள இடங்களுக்கு தம்மைத் தேர்ந்தெடுக்குமாறு விண்ணப்பித்துள்ளதாக உள்நாட்டமைச்சு அதிகாரி தெரிவித்தார்.

இம்மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் அரசாங்க அதிபர்கள் கூடும்பொழுது கிராமசேவகர்களாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ள பழைய கிராமத்தலைமைக்காரர்களை அவரவர் முன்னரே சேவைசெய்த பிரிவுகளில் தொடர்ந்து சேவையாற்ற அனுமதிப்பதா இல்லையா என்பது பற்றியும் ஆராயப்படும்.

## மைசூர் முதன்மந்திரி

புதுடில்லி, மார்ச் 13

மைசூர் முதன் மந்திரி திரு. நிஜலிங்கப்பா நேற்று மத்திய அரசாங்க நீர்ப்பாசன மந்திரி ஹாபீஸ் முகம்மது இப்ராகிமையும் பிரதம மந்திரியையும் சந்தித்துப் பேசினர்.

# ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய மந்திரியிடம் தூதுகோஷ்டி

## வள்ளுவ மகாசபை நிர்வாகக் கமிட்டி தீர்மானம்

யாப்பபாணம், புதன்

தென் பகுதியிலுள்ள வள்ளுவர் சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை வடபகுதிக்கு உடனடியாக மாற்றவேண்டுமென்று வற்புறுத்த திரு. எஸ். பி. நீவானந்தமும், திரு. ஆசீர்வாதம் ஹென்றியும் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினத்துடன் கல்வி மந்திரியிடம் தூது செல்ல வேண்டுமென்று அரியாலையில் கூடிய வள்ளுவர் மகாசபையின் நிர்வாகசபை தீர்மானித்தது.

திரு. ஆசீர்வாதம் தலைமையில் கூடிய இந் நிர்வாகசபை, வள்ளுவர் மகாசபையின் 20-வது வருடாந்த மகாநாட்டை எப்ரல் 21-ந் திகதி நடாத்தவேண்டுமென்றும் அம் மகாநாட்டிற்கு முதலியார் செ. சின்னத்தம்பி தலைமைவகிக்கவும் திருவாளர்கள் கே. நேசையா, எஸ். கதிரவேற்பிள்ளை, பண்டிதர் ஐயம்பிள்ளை ஆகியோர் விசேடப் பேச்சு நிகழ்த்தவும் கூடியதாக ஒழுங்குசெய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சிரேஷ்ட தராதரப்பத்திரம் பெற்ற வள்ளுவர் சமூக வாலிபர்களை ஆசிரியர்களாக நியமிக்கவும், இச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆசிரியப் பயிற்சித் தெரிவில் சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் கல்விப்பகுதியாரிடமும், கல்வி மந்திரியிடமும் வற்புறுத்தப் படல் வேண்டுமென்றும் இன்னென் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தற்போது வள்ளுவர் மகாசபைலலுள்ளவர்கள் சிறுபான்மைத் தமிழர் மகாசபையிலிருக்கின்றனரென்றும் அவ்விதம் அங்கத்துவம் வகிப்பவர்களை வள்ளுவர் மகாசபை நிராகரிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இறுதியாக, நெசவாளர்கள் முன்னேற்றமடைய அமெரிக்கத் தூதுவராலயம் மூலமாக நன்கொடைப் பணம் பெற்று அமெரிக்காவில் நவீன நெசவு முறைகள் கற்க வசதிகள் செய்யும் ஒழுங்கு செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

---

## கண்டி மேயர் ராஜினமா

கொழும்பு, புதன்

கண்டி மேயர் சர் பெனட் சொய்ஸா இன்று காலை ராஜினமாச் செய்தார். புதிய மேயரைத் தெரிவு செய்யும் பொருட்டு கண்டி மாநகர சபைக் கூட்டம் விரைவில் நடைபெறும். சபையில் யு. என். பி. ஒரு அதிகப்படியான ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது.

---

## அராபிய தலைவர்கள் மகாநாடு

கெய்ரோ, மார்ச் 13

5 அராபிய நாடுகளின் (ஐக்கிய அராபியக் குடியரசு, ஈராக், ஸிரியா, ஏமன், அல்ஜீரியா) பெருந்தலைவர்கள் மகாநாடு ஒன்றை நடத்துவது சம்பந்தமாக ஈராக் வெளிநாட்டு மந்திரி ஜனதிபதி நாஸருடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக அறிவிக்கப்பட்டது.

---

## அமெரிக்காவில் வெள்ளம்

வாஷிங்டன், மார்ச் 13

அமெரிக்காவின் 5 தென் மாகாணங்களில் வெள்ளம் ஏற்பட்டிருப்பது காரணமாக 14 பேர் மாண்டனர். 30 ஆயிரம் பேர் வீடிழந்தனர்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

"கள்ளத்தோணிகள்" என்று அவமதிப்பது நீதியா? பொறுப்பான செயலா? இனியாவது அப்பத்திரிகை இவ்வித விஷமம் செய்யாமலிருக்கவேண்டுமென்றுதான் இதை வருத்தத்துடன் எழுதுகிறேன். ஆனல் ஏழையின் சொல் அம்பலம் ஏறுமா?

* * *

வென்றுளைப் புலன் ஐந்தும
என் தீவினை
கொன்றுளை குணத்தாலே
வணங்கிட
நன்று நன்மனம்
வைத்திடு ஞானமாம்
ஒன்றுளைக் கண்டுகொண்ட
தென் உள்ளமே.
—திருநாவுக்கரசர்.

---

## திருவிழாக்களில் 8 இசையாளர்களுக்கு மட்டும் அனுமதி

யாழ்ப்பாணம், வியாழன்

இவ்வருடம் யாழ்ப்பாணக் கோவில் திருவிழாக்களுக்கு இசையாளர்கள் 8 பேரை மட்டும் வருவிக்க உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடம் 12 பேரை வருவிக்கும் உத்தரவு இருந்தும் இவ்வருடம் அத்தொகை மூன்றில் இரண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது. யாழ் பிரதேச கலாமன்றம் சென்ற வருடப் போதாக்குறையைக் காட்டி குறைந்தது 25 பேராகுதல் வருவிக்க அரசாங்கத்திடம் கோரியிருந்தும் இவ்வளவில் குறைத்ததற்குத் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்து மேலதிகமாகவரவழைக்க உத்தரவு தருமாறும் விண்ணப்பித்துள்ளனர்.

---

## கள்இறக்கும் தொழிலாளர் மகாநாடு

யாழ்ப்பாணம், வியாழன்

வடஇலங்கை கள் இறக்குந் தொழிலாளர் சங்கத்தின் 33-வது மகாநாடு வதிரிதேவரையாளி இந்துக்கல்லூரியில் வருகிற ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருக்கிறது.

அமரர் பொன். கந்தையாவின் உருவப்படம் திரைநீக்கஞ் செய்துவைக்கப்படவிருப்பதோடு திரு. எஸ. ஆர். ஜேக்கப்புக்கு கதிராடை போர்த்தி பொன் முடிப்பு வழங்கப்படவிருக்கிறது.

இவ்விழாவில் தொழிலாளர் கூட்டுறவுப் போத்தல்கள் அடைப்புச் சங்கம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

---

## திருக்குறள் விழா

யாழ்ப்பாணம், வியாழன்

'திருக்குறள் தமிழரின் சிறப்பான நூல். தமிழ்நாடு மட்டுமின்றி உலகம் பூராவும் ஏற்றுக்கொள்ளும் திருக்குறள்' என்று பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வரஐயர் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் திருவள்ளுவர் நினைவு நாளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் திருக்குறளின் சிறப்பை விளக்கி பண்டிதர் சே. இளமுருகனர், வித்துவான் க. வேந்தனர், செல்வன் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பேசினர். சமயப்பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் நன்றி கூறினர்.

## ராஜரத்தின . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### உபகமிட்டி நியமிக்கக் கோருவார்

திரு. ராஜரத்தினவின் இக் குற்றச்சாட்டை விசாரணை செய்வதற்கு பார்லிமெண்ட் உபகமிட்டியொன்றை நியமிக்குமாறு சபாநாயகரைச் சந்தித்துக்கேட்கவிருப்பதாக திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அந்தக் குற்றச்சாட்டை திரு. ராஜரத்தின நிரூபிக்கவேண்டும். இல்லையேல் வாபஸ்பெற வேண்டும் என்று திரு தொண்டமான் கூறினர்.

"திரு ராஜரத்தினவின் குற்றச்சாட்டு வேண்டுமென்றே சோடிக்கப்பட்டது; முழுப்பொய். ஒரு பார்லிமெண்ட் அங்கத்தவர் சொல்லக்கூடாத இந்த வார்த்தையை சும்மா விட்டுவிட முடியாது இந்தமாதிரி ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதில் திரு. ராஜரத்தின கெட்டிக்காரர்தான். நான் இதைச் சும்மாவிடமாட்டேன்" என்று திரு. தொண்டமான் கூறினர்.

### ராஜரத்தின பதில்

திரு. தொண்டமானின் இந்த அறிக்கைபற்றி திரு. ராஜரத்தின குறிப்பிடுகையில் பின்வருமாறு கூறினர்.

திரு. இலங்கரத்தின பார்லிமெண்டிலிருந்தபோது மட்டுமல்ல அவர் பேசிக்கொண்டிருந்த சமயத்திலேயே நான் இக் குற்றச்சாட்டைத் தெரிவித்தேன். எனது குற்றச்சாட்டு பொய்யானதாக இருந்திருந்தால் திரு இலங்கரத்தின உடனடியாகவே மறுத்திருக்கலாம். மறுத்திருக்கவேண்டியது திரு. இலங்கரத்தின. ஒரு வாரம் கழித்து இதைத் தொண்டமான் 'தூக்கத்' தேவையில்லை.

திரு. தொண்டமான் அந்த நெக்ளஸை' திருமதி இலங்கரத்தினவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்திராவிட்டால், தொண்டமானின் தொழிலாளர் காங்கிரஸ போன்ற ஸதாபனங்களில் உள்ள தேச விரோத 'வால் பிடி'த் தலைவர்கள் இந்நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைந்த ஆயிரக்கணக்கான இந்தியர்களின் உரிமைகளுக்காக ப்பாடுபடுவதுபோல், அந்த 'நெக்ளஸும்' கள்ளத்தனமாக வந்திருக்கக்கூடுமென்பதைத்தவிர வேறு எதுவும் நான் சொல்லவிரும்பவில்லை.

---

## மத்தாப்பு இராசையா கொலை வழக்கு எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன்

மத்தாப்பு இராசையா கொலைவழக்கு விசாரணையின் பின் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

நீராவியடியைச் சேர்ந்த நல்லதம்பி இராசையா என்பவரை அவரது தமையனை நல்லதம்பி இரத்தினம் சுட்டுக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு வந்தது.

நேற்றுக் காலை வழக்கின் தீர்ப்பு வெளியிடப்பட்டது. மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கையில், வழக்காளிகள் எதிரி தான் இறந்தவருக்குக்கு மரணத்தை வருவித்தவர் என்று நிரூபிக்கவில்லை என்று கூறி எதிரியை விடுதலை செய்தார்.

திரு. ஆர். கண்ணுத்துரை இன்ஸ்பெக்டர் திரு. பைட்டின் உதவியுடன் வழக்கை நடத்தினர். எதிரி சார்பில் திரு. எஸ். ஸி. கதிரவேலு, திரு. வி. நடராசாவின் உதவியுடன் ஆஜரானர்.

## சமயப் பிரசங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர் ஸ்ரீ முருகன் தேவஸ்தான காவலரின் ஆதரவுடன் அகில இலங்கை பொது சன சேவைச் சங்க சைவப் பிரசார சபை நடாத்தும் சமயப்பிரசங்கத்தொடரில், நாளை வெள்ளிக்கிழமை மாலை நல்லூர் தேவஸ்தான சண்முக தீர்த்தமண்டபத்தில் செல்வி நாகபூஷணி பரஞ்சோதி "திருஞான சம்பந்தர்" என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்துவார். ஸ்ரீ வி. எஸ். எஸ். மணிபாகவதர் தலைமைவகிப்பார்.

---

## காயமடைந்த பாடசாலைச்சிறுவன்

கொழும்பு, புதன்

தெஹிவளை கொழும்பு தெற்கு மாஜிஸ்ரேட் கோர்ட்டிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த ஒரு கோஷ்டி மீது, வாடகைக் காரிலிருந்த ஆயுதம் தரித்த கோஷ்டியினர் தாக்கியதால் இரு பாடசாலை மாணவர்களும், ஒரு நபரும் காயமடைந்தனர். வீதிக்குக் குறுக்கே நடந்த ஒரு பாடசாலைச்சிறுமன் துப்பாக்கிச் சூட்டிலை காயமடைந்தான். மற்றொரு சிறுவனும் நபரும் கைகுண்டு வீசப்பட்டதால்காயமடைந்தனர்.

## மூவருக்குப் பரிசு

சென்னை, மார்ச் 13

தமிழ் டைப்ரைட்டர்களில் எழுத்துக்களின் அமைப்பில் சீர்திருத்தம்செய்த பி. கே. லக்ஷிமிநாராயணன், சுப்ரமண்யம் சுவாமிநாதன் ஆகியோருக்கு தலா 500 ரூபாய் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

எண்ணெத் தகராறு

## ராஜாங்க இலாகாவின் கருத்து வேறு

கொழும்பு, புதன்

எண்ணைப் பிரச்னை காரணமாக தேயிலை, றப்பர் ஏற்றுமதி மார்க்கெட் பாதிக்கப்படக் கூடுமென்று இலங்கையிலுள்ள ஒரு எண்ணைக் கம்பெனி தெரிவித்த கருத்தை அமெரிகக ராஜாங்க இலாகா கொண்டிருக்கவில்லை என அமெரிக்காவிலுள்ள இலங்கை ஸ்தானிகர் அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கிருர்.

இலங்கை ஸ்தானிகர் திரு. ஜயரத்னவின் கடிதம் பற்றி மந்திரி சபையில் விவாதிக்கப்படும் என்றும் அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினர்.

---

## தேவாரமும் திருக்குறளும்

"திருக்குறள் தேவாரத் திருவாசகங்களைப்போல் மிக உயர்ந்தது. ஔவைப்பிராட்டியும் கூட, 'தேவர் குறளும் திருநான் மறைமுடியும், மூவர் தமிழும், முனி மொழியும் கோவை திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒரு வாசகமென்றுணர்' என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது" என்று நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா, யாழ்ப்பாண நாவலர் பாடசாலையில் நடைபெற்ற வள்ளுவர் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். இதுபற்றி, 'ஈழநாடு' சில பிரதிகளில் வாசகம் தவருக வெளியானமைக்கு வருந்துகிறோம்.


இப்பொழுது நடைபெறுகிறது

வீர காவியம் !!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) — ராஜ் (நீர்கொழும்பு) — விஜிதா (அட்டன்)
மொடர்ன் (பதுளை) — தீவொலி (நுவரேலியா) — ஜெமினி (ருகலை) — ஸ்ரீகிருஷ்ண (திருக்கோணமலை)

மற்றும் திரைகளில்!

தொண்டு செய்யும் அடிமை உனக்கு சுதந்திர நினைவோ? என்று கொக்கரித்த வெள்ளையரின் கொட்டத்தை முறியடித்தான் — கப்பலோட்டிய தமிழன்.

★ பார்த்தோர் பரவசப்படுகிருர்கள்
★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிருர்கள்

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
சாவித்திரி
முத்துலட்சுமி
வி. நாகையா
குமாரி ருக்மணி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணநிதி



மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

கப்பலோட்டிய தமிழன்

மனோகரா (யாழ்ப்பாணம்)
பி. யு. சின்னப்பா, எம். எஸ். சரோஜினி நடித்த
ஜெகதலப்ரதாபன்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 83-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.